உ

# காணாபத்திய மலர்







திருக்கோணமலை
ஆலடி விநாயகர் தேவஸ்தானம்
கும்பாபிஷேகம்
24-10-1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments - S.P. Rajah
22-11-96

உ
சிவமயம்

திருக்கோணமலை ஆலடி விநாயகர் தேவஸ்தான

## திருக்குடத் திருமஞ்சன
## (மகா கும்பாபிஷேக)

# காணாபத்திய மலர்

நூலாசிரியர்

"சுத்தகணித சோதிடர்"
"சோதிட சைவ சித்தாந்த சேகரம்"
**ஸ்ரீலஸ்ரீ மு. சுந்தரலிங்க தேசிகர்**
(தேவஸ்தான நிர்வாகஸ்தர்)

## கும்பாபிஷேக தினம்

தாத்ரு வருடம் ஐப்பசி 8 ம் நாள்
(வியாழக்கிழமை)

## 24 - 10 - 1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



ஆலடி விநாயகர் தேவஸ்தான பிரதம குருவும்,

ஆதீன தர்மகர்த்தாவும்,

அகில இலங்கை சைவ குருமார் பீடாதிபதியும்,

வேதாரணிய ஆதீனமும்,

பதினென் புராண, இதிகாச ஆகம வித்தகருமான

**ஸ்ரீலஸ்ரீ. சு. கு. முத்துக்குமாரசுவாமிக்குருக்கள்**

**அவர்களின்**

# வாழ்த்துரை

அறுபத்திமூன்று திருத்தொண்டர்களினதும் சமயகுரவர் நால்வரினதும் வழிகாட்டலின் வழிநின்று திருக்கோணமலையில் வாழ்கின்ற சைவப்பெருமக்கள் எத்தகைய கருமங்கள் செய்யினும் ஆலடி விநாயகப் பெருமானுக்கு அர்ச்சனைகள், கற்கண்டு மோதக பூஜைகள், வழிபாடுகள் இயற்றியே எல்லாக் கருமங்களும் தொடங்குவர். ஆலடி விநாயகர் ஆலயம் சிறிது எனினும் மூர்த்தியின் கீர்த்தி பெரிது. எனது தந்தையார் காலத்தில் விநாயகப் பெருமான் பல விதமான அற்புதங்களைப் புரிந்தவர். சுவாமி விபுலாநந்தர் இந்துக்கல்லூரியில் அதிபராக இருந்த காலத்தில் மூன்று வேளைப் பூஜையிலும் கலந்து வழிபாடு செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1972ம் ஆண்டு மடாலயமாக இருந்த இந்த ஆலயம் கற்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்பன புதிதாக திருப்பணி வேலைகள் செய்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. தற்பொழுது விநாயகப் பெருமானுக்கு 24-10-1996 வியாழக்கிழமை அன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையொட்டி நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வாலயத் திருப்பணிகளுக்கு ஒத்துழைப்புத்தந்த சைவப் பெருமக்களுக்கும் கும்பாபிஷேக கிரியைகளை சிறப்பித்து நடாத்த முன்வந்த ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீன கர்த்தா வேதாகமமாமணி சோ. இரவிச்சந்திர குருக்கள் அவர்கட்கும் பிரதிஷ்டா சிரோன்மணி சாமி. விஸ்வநாதக்குருக்கள் அவர்கட்கும் முத்துக்குமாரசுவாமி கோயில் குரு ஸ்ரீ இரா. ராஜேஸ்வரக்குருக்கள் அவர்கட்கும் மற்றும் சிவாச்சாரியப் பெருமக்களுக்கும், மற்றும் சிற்பக்கலைஞர் கந்ததாஸ் ரவீந்திரதாஸ் குழுவினர்க்கும் ஸ்தபதி சிவசோதிலிங்கம் ஆச்சாரி அவர்கட்கும் மற்றும் திருப்பணி வேலைகட்கு உதவிய அன்பர்கட்கும் திருக்கோணமலை வாழு [illegible] பெரு மக்கள் அனைவருக்கும் திருவருள் நிலைபெற ஆலடி விநாயகப் பெருமானை வாழ்த்தி வணங்குகிறேன்.

ஆலடி விநாயகர் தேவஸ்தானம்,
திருக்கோணமலை.

இவ்வண்ணம்
**சு. கு. முத்துக்குமாரசுவாமிக் [illegible]ள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



நகராட்சி மன்றத் தலைவர்

பெ. சூரியமூர்த்தி

அவர்களின்

# வாழ்த்துரை

"செயத்தக்க அல்ல செயக் கெடும் செயத்தக்க செய்யாமை யானுங் கெடும்"

என்பது வள்ளுவர் வாய்மொழி. அதாவது சமூகத்தில் செய்யத்தகாதவற்றைச் செய்வதாலும் செய்ய வேண்டியவற்றை செய்யாமல் விடுவதாலும் கேடு விளையும் என்பது இக்குறட் பாவின் கருத்தாகும். எனவே அவ்வப்போது எமது சமூகக்கடமைகள் எவையென்பதை உணர்ந்து கருமமாற்றுதல் மக்களாய்ப் பிறந்த எமது தலையாய கடனாகும். இதனை இன்று கருத்திற் கொண்டுஆலடிவிநாயகர்கும்பாபிஷேக திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 40 நாட்களுக்குள் கும்பாபிஷேகம் நடைபெறுவது விநாயகப் பெருமானின் திருவருள்.

விநாயகர் ஒரு ஞானக் குழந்தை என திருமூலர் கூறுகின்றார். ஆலடி விநாயகர் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் இருந்து பள்ளிச் சிறுவர்களுக்கு குறையாத கல்வியை வாரிவழங்கிக் கொண்டிருக்கின்றார். இவர் ஒரு குழந்தைச் சுவாமி.

விநாயகர் கும்பாபிஷேகம் முதல் இரண்டு கலை நிகழ்ச்சிகள் "பாகவத சூடாமணி" "ஆன்மீகச் செல்வர்" எஸ். ஜானகிராமன் அவர்களின் கதாப்பிரசங்கமும், வெள்ளி விழாக் கலைஞர், சொற்சுவை வேந்தன், கலாவினோதன் வில்லிசைப் புலவர் திரு.க. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி) குழுவினரின் வில்லிசையும் நடைபெறுவது திருக்கோணமலை மக்கள் அறிவின்பம் பெற சிறந்த வாய்ப்பாகும். இதே போன்று கலை நிகழ்ச்சிகள் திருக்கோணமலையில் நடைபெற வேண்டும் என்று எல்லாம் வல்ல விநாயகப் பெருமானைக் கேட்டு வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

நகராட்சி மன்றம்,
திருக்கோணமலை.

**பெ. சூரியமூர்த்தி**
தலைவர்

உ



*திருக்கோணேஸ்வர தேவஸ்தான*

*தலைவர்*

**திரு. மு. கோ. செல்வராசா**

*அவர்களின்*

# ஆசிச் செய்தி

அரசியல் சமய சமூகரீதியிலும் வரலாற்றுச் சிறப்பினையும் கொண்டது திருக்கோணமலை. இயற்கை வனப்பும், எழில் சிறப்பும் கொண்டதான இந் நகரின் கண்ணே பார்க்கும் இடம் எங்கும் ஆலயங்கள் கொண்டு அருட் சிறப்பினை வழங்கிக் கொண்டிருக்கும் பாங்கினை நாம் காணமுடியும்.

இத்தகு சிறப்பினைக் கொண்டதான திருக்கோணமலை நகரின் கண் கோணேஸ்வரத் தானை எதிர்நோக்கிய வண்ணம் ஆலடி விநாயகப் பெருமான் எழுந்தருளி உள்ளார். நகரின் மையப் பகுதியில் எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமானை சமய வேறுபாடுகள் அற்ற நிலையில் வேற்று சமயத்தவரும் சென்று வழிபாடாற்றுவது அன்றாடம் காணக்கூடிய காட்சியாகும்.

இத்தகு சிறப்பு மிக்கதான ஆலடி விநாயகர் தேவஸ்தானம் ஆத்மீக ரீதியிலான செயற்பாடுகளை மேற்கொண்டிருப்பதுடன் மட்டுமன்றி சமூகப் பணிகளையும் பெருமளவில் மேற்கொண்டுள்ளனர்.

குறிப்பாக பாடசாலை மாணவ மாணவியர்க்கு இலவசமாக சமய வகுப்புகளை நடத்தியுள்ளமை, பல சமய, இலக்கிய, வரலாற்று நூல்களை வெளியிட்டுள்ளமை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

ஆலய ஆதீனகர்த்தாவும், பிரதமகுருவுமான சு. முத்துக்குமாரசுவாமிக்குருக்கள் மற்றும் அவரது புத்திரர்களான சுந்தரலிங்க தேசிகர், சண்முகரெத்தினக்குருக்கள் ஆகியோரின் ஒன்றுபட்ட பணிகளினாலும், உழைப்பினாலும் ஆலடி விநாயகர் தேவஸ்தானத்தில் இன்று மீண்டும் மகா கும்பாபிஷேகம் இடம்பெறுவது கண்டு நாம் பெருமகிழ்வடைகிறோம். விநாயகப் பெருமானின் அருட்கடாட்சத்தினாலேயே இப்புனித கைங்கரியம் நிறைவேறியுள்ளது.

இத் தேவஸ்தானத்தின் பணிகள் மென்மேலும் சிறப்புற ஏழிசையாய் விளங்கும் எங்கள் பெருமானின் அருளாசிகளுடன் உலகெங்கும் சிறப்புறவும், சகல ஆன்மாக்களும் நற்பேறு பெறவும் வாழ்த்துகின்றேன்.

திருக்கோணேஸ்வரர்
தேவஸ்தானம்,
திருக்கோணமலை.

**மு. கோ. செல்வராசா**
தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆலடி விநாயகர் தேவஸ்தான
## சிறுவர் சமய வளர்ச்சிப் பணிகள்

- ஞாயிறு தோறும் அதிபர் வ. தங்கவேல் ( புனித பிரான்சிஸ் சவேரியார் மகா வித்தியாலயம் ) அவர்கள் தலைமையின் கீழ் இந்து சமய சேவைக்கால ஆலோசகர் திருமதி . வேலாயுதம் ஆசிரியை அவர்களும், ஆசிரியர்களும் 5000 மாணவர்களுக்கு சைவநெறிப் பயிற்சிகளும், சமய பாட வகுப்புக்களும் நடத்தியது.

- 1995 ம் ஆண்டு சரஸ்வதி பூஜையில் 3000 சரஸ்வதி மகத்துவ பிரசுரங்கள் அன்பளிப்பு செய்தமை.

- 1996 சரஸ்வதி பூஜையில் 20,000 மாணவர்களுக்கு திருக்கோணமலை மாவட்டம் முழுவதும் சகலகலாவல்லி மாலை நூல் இலவசமாக கொடுத்தமை .

# நூல் வெளியீடு

27 .08 .1996 ல் கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணேஸ்வரப் பெருமானின் பெருமை கூறும் " திருக்கோணேஸ்வரம் " நூல் பிரதிஷ்டா பூஷணம்- சிவாகமஞானபானு - பிரதிஷ்டா கலாநிதி - நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தான ஆதீன குரு சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் (மாதுமை சமேத கோணநாதேஸ்வரப் பெருமானின் பிரதிஷ்டா துரந்தரர் ) அவர்கள் தலைமையின் கீழ் மு. சுந்தரலிங்க தேசிகர் அவர்களால் வெளியிடப் பட்டது. இதில் பல நூற்றுக் கணக்கான சைவ அன்பர்கள் கலந்து கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



## ஆலடி விநாயகர் தேவஸ்தான கும்பாபிஷேகம்

# ஆசியுரை

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

-திருமூலர் திருமந்திரம்

மனிதப் பிறவியின் நோக்கம் கடவுளை அறிந்து கடவுளை வழிபட்டுக் கடவுளை அடைதலேயாகும் என்று ஆறுமுகநாவலர் பெருமான் அருளியுள்ளார். கடவுளை அறியவும், கடவுளை வழிபடவும் ஆலயங்கள் மிகவும் முக்கியமானவை. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றும், ஆலயந்தொழுவது சாலவும் நன்று என்றும், கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்றும் ஆன்றோர்கள் கூறியுள்ளனர். திருக்கோயில் இல்லாத திருவிலூர் அடவி காடே எனத் தேவாரம் அறிவுறுத்துகிறது.

சிவபூமியின் சிறப்பைக் கூறுகையில் திருமூலநாயனார்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.

என அருளியுள்ளார்.

ஆலடி விநாயகர் என்று எல்லோராலும் போற்றி வழிபாடு செய்யப்படும் பிள்ளையார் நகரத்தின் நடுவிலும் கோணேசர் ஆலயத்தினதும் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தினதும் இடையிலும் அமர்ந்திருந்து எட்டுத் திக்கெங்கும் அடியார்களுக்கு அருள் வழங்குகிறார்.

ஆலய கும்பாபிஷேக நிகழ்வறிந்த மக்கள் எல்லோரும் ஆனந்தம் பெருகி அக மகிழ்வடைகின்றனர். கும்பாபிஷேகம் இனிது நிறைவேறவும், விநாயகப் பெருமானின் திருவருளால் மக்கள் இறை பக்தர்களாகி இன்புற்றிருக்கவும் நாட்டில் அமைதி சமாதானம் சாந்தி ஏற்பட்டு ஏக்கமின்றி வாழவும் பிரார்த்திக்கிறோம்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

முத்துக்குமாரசுவாமி கோயிலடி,
திருக்கோணமலை.
**15-10-1996**

**பொ. கந்தையா**
(காந்தி ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கணேச அச்சகம்

# SRI GANESHA PRESS

பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின்
பாராட்டுக்களைப் பெற்று நல்சேவை புரிந்து வரும்

## ஸ்ரீ கணேச அச்சகம்

தற்பொழுது உங்களுக்கு நவீன முறை அச்சிடுதலை
செய்து வருகின்றது

## கணனி எழுத்தமைப்பு
## பிளேற் மேக்கிங்
## ஓவ்செற் பிரின்டிங்

இவைகள் துரித சேவை, நம்பிக்கையான பங்களிப்பு, கவர்ச்சியான பலவர்ண
பிரின்டிங், செலவிடும் பணத்தை விட திருப்திகரமான சேவைகள்

*இவை அனைத்தும்*

## ஸ்ரீ கணேச அச்சகத்தில்

*மட்டுமே தனித்துவமானவை*
*இவற்றுடன்*
*வெகு விரைவில் இங்கு ஆரம்பிக்கப்பட*
*இருக்கின்றது*

**ஸ்கிரீன் பிரின்டிங்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

ஸ்ரீ குருப்யோ நம

# அருள்மிகு ஆலடி விநாயகர்

"மூஷிகவாகன மோதகஹஸ்த சாமரகர்ண விலம்பித் சூத்திர
வாமநரூப மகேஸ்வர புத்திரவிக்கின விநாயக பாதநமஸ்தே"

பிரதமகுரு, பிரதிஷ்டா சிரோன்மணி,
சிவாச்சாரிய துரந்தரர், கிரியா கிரம ஜோதி
**பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள்**

ஸ்ரீ தக்ஷிணகைலாசமெனவும் திரிகூடாசலம் திருமலை எனவும் பல பெரியார்களால் வியந்து போற்றப்படுவதும் ஞானசம்பந்தப் பெருமானால் பதிகம் பாடியருளப் பெற்றதுமான மாதுமை அம்பிகாசமேத ஸ்ரீ கோணேஸ்வரப் பெருமான் சந்நிதியையும், முற்றவெளி அருள்மிகு பத்திரகாளி ஆலயத்திற்கு முன்பாக பலநூற்றாண்டுக்கு முன்னதாக அமைந்து சகல மக்களுக்கும் சித்தியையும், புத்தியையும், ஞானத்தையும் வழங்கி அருளும் பிரணவஸ்ரூபியான ஸ்ரீ ஆலடி விநாயகர் ஆலய புனராவர்த்தன மகா சாந்தியான சம்புரோக்ஷண கும்பாபிஷேக விழாவானது நிகழும் தாது வருடம் ஐப்பசி மாதம் 8ம் திகதி (24 - 10 - 1996) குருவாரமும் உத்தரநக்ஷத்திரமும் பூர்வதிர யோதசி திதியும் சித்தயோகமும் தனுர்லக்கினமும் பொருந்திய சுபமுகூர்த்தத்தில் நடைபெறத் திருவருள் கூட்டி இருப்பது சிறப்புடையது எனலாம். எனவே இந்த ஆலயத்தை அன்பு, அருள்குல தர்மம், ஆசாரம் ஆன்மார்த்த பூஜைகளில் வழுவாத குணசீலர் ஆகம புராண இதிகாச வித்தகர் சிவஸ்ரீ சு. முத்துக்குமாரசுவாமிக் குருக்களும், புத்திரர்கள் மு. சுந்தரலிங்கதேசிகர் மு. சண்முக ரெத்தினக் குருக்கள் ஆகியோரும் முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன் எனத்திருத் தொண்டர் தொகையில் கூறப்பெற்ற அருள்வாக்கியத்திற்கு அமைய பூஜை புரிந்து தர்மகர்த்தா வாகவும் மக்களுக்கு அருளாசிவழங்குபவராகவும் சிறப்புடன் பரிபாலித்து வருவதை நாம் காண்கின்றோம். எனவே தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை என்ற வாக்கினை செயல் மேற் கொண்டு அவர்தம் புத்திரர்கள் சிறப்பாக ஆலயகைங்கரியங்களை நடத்திவருவதும் சமய சம்பந்தமான புத்தகங்களை தம் அச்சகத்தில் அச்சிட்டு வழங்கிவருவதும் சைவத்திற்கு மெருகூட்டு வதாக அமைவது பொருத்தமாகும். தெய்வீகத்தால் கிடைக்கப்பெற்ற இந்த முகூர்த்தம் தனுலக்கினம் லக்கினாதிபதி குரு இருப்பதால் இக்கும்பாபிஷேக பலனாக மேலும் அவர்கட்கு நன்மையும், உயர்வும் சிறப்பும் உண்டு என்பது எமது முழு நம்பிக்கையாகும்.

## உருவ வழிபாடு

ஆத்ம ஞானிகளாக இருஷிகள், தவசிரேஷ்டர்கள், ஞானமார்க்கத்தைக் கொண்ட யோகிகள் தமது தியான நிலையில் தம்முன்னே உருவத்தை தியானநிலையில் காணக்கூடிய தன்மை வாய்ந்த சிறப்பு உடையவர்கள். எனவே பாமரமக்களாகிய நாங்கள் உருவத்திருமேனி யின் மூலம்தான் எமது மனதை இறைவன் பால் செலுத்தி வழிபட்டு பலன் பெறும் தன்மையுண்டு.

தாம் அறிந்ததை எப்படி மற்றவர்களுக்கு அறியச்செய்வது என்பதும் அனுபவிக்கச் செய் வது என்பதும் எமக்குத் தெரிந்தவற்றை எப்படி மற்றவர்கட்கு புரிந்துகொள்ளச் செய்வது என்பதுமே எமது பழங்கால இருஷிகளினதும் ஞானிகளினதும் நோக்கமாக இருந்தன.

பேரின்பத்தை யான் பெற்றேன் அதை உலகில் உள்ள மக்கள் அனைவரும் பெற்றுக் கடைத்தேற வேண்டும் என்றார் திருமூலர்.

உதாரணம்:- "நான் பெற்ற இன்பம் பெறுக வையகம்"
வான்பற்றி நின்ற மறைபொருள் என்பது திருமூலர் வாக்கு
"மந்திரம் தான் பற்ற பற்றாத்தலைப்படும் தானே என்பது திருமந்திரம்

"தந்தரஸ்ய ஸர்வஸ்ய ததுஸ்ர்வஸ்யாயஸ்ய பாஹ்யத" என்பது உபநிஷதமம்.
உடம்பிற்கு வெளியே பரவிநிற்கும் மெய்ப்பொருளை உடம்புக்கு உள்ளேயும் கண்டு அனுபவிப் பதற்கு நம் உடம்பின் உணர்வைக்கொண்டு உள்ளும் புறமும் இரண்டற்ற பாவனையில் தியானிப் பதே தியானநிலை. இருஷிகள் கண்ட இன்ப நிலை எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"கண்டவர் விண்டிலர்**

**விண்டவர் கண்டிலர்"** என்பது திருமூலர் வாக்கு. மெய்ப்பொருளை தம் முன் பார்த்தவர்கள் எடுத்துச் செல்ல முடிவதில்லை. அப்படி ஒருவாறு சொல்ல முயற்சித்தாலும் நேரடியாக அதை விளக்கமாக சொல்ல முடிவதில்லை. அவர்களது இந்த நிலை ஓர் அதிசயமான கனவைக் கண்ட ஊமை உளறுவதைப் போன்று தான். கனவொன்று கண்டதைக் கூடச் சொல்ல ஊமையால்பிறர் அறியச் சொல்ல முடியாதநிலையாகிய

அவிஜ்ஞாதம் விஜானதாம்

விஜ்ஞாதம் அவிஜானதாம் என்பது கேனோபநிஷதம். மனம் வாக்கு செயலினால் அடைவதற்கு அரியதாய் அருஉருவாகி என்று போல இருக்கும் பொருளை எவ்வாறு புகழ்வது என கந்தரலங்காரம் அருணகிரிவார்த்தைகளால் விவரிக்க முடியாத அவரவரது சாதாரண அனுபவத்தையும் கூட மற்றவர்களுக்கு ஒருவாறு புரியச்செய்வதற்கே பல வார்த்தைகள் தேவைப் படுகின்றது. அப்படி சொல்லியும் கூட அதைப் புரிந்து கொண்டார என்பது நிச்சயமாகச் சொல்ல முடியாது. அதே அனுபவத்தை முழுமையாக உணர ஒரே ஒரு வழிதான் உள்ளது. அதாவது அந்த அனுபவத்தை அவரே அமைவது எனலாம்.

அப்பரம்பொருள் மனித உருவமாக... ...வின் மேலீட்டினால் உணரும் போது உருவ மற்ற சக்தியாகவும் பேரொளியாகவும் திகழ்... ...ருவற்ற பரம்பொருள் ஒன்றே ஒன்றுதான் ஆனால் அதன் வழிபாட்டு முறையையும் உ... ...வங்களும் எண்ணிறைந்தவையாகும், சுமார் ஒன்பதினாயிரம் வருஷங்களுக்கு மேலானது இருக்கு வேதம்.

[illegible]

[illegible]

ஒரு நாமம் ஒரு உருவம் ஒன்று இல்லார்க்கு ஆயிரம் திருநாமம்.

பாடி நாம் தெந்நோணம் கொட்டோமோ என்பது மணிவாசகர் இருஷிகளும் வேதசாஸ்திரம் உணர்ந்த மெய்ஞானிகளும் தாங்கள் நேரில் சொல்ல முடியாதவைகளை சில உவமான உவமேயங்கள் மூலமாகவும் சில இரகசியமூலமாகவும் விக்கிரக உருவங்கள் மூலமாகவும் நமக்குப் புரியும் வண்ணம் உணர்த்தி வைத்தனர். இதுவே உருவ வழிபாட்டின்நெறியாகும் மேலும் நமது மனதையும் உணர்வையும் தூண்டிவிடக் கூடிய அறிவுரைகளையும் விளக்கங்கள் மூலம் பரம் பொருளை அடைவதற்குரிய வகைகளை வகுத்து வைத்தனர்

விறகீற்தீயினள் - பாலில் படு நெய் போல்
உறவு கோல் நட்டு - உயர்வென்னுங் கயிற்றினால்
முறுகவாங்கிக்கடைய முன்னிற்குமே

எனத்திருநாவுக்கரசர் திருவாசகத்தினால் இறைவன் திருநிலையை எமக்கு விளக்கி இருப்பது இப்பாடலில் தெரியக்கிடக்கின்றது. எனவே இவ்வாறாக இருஷிகள் ஒரு பிரமாண்டமான பொருள் அல்லது விஸ்வவஸ்து உள்ளது என்றும் அது விஸ்வப்பொருள் ஆதலால் அது பூரண மாய் நிலையானதாய் உள்ளது எனக் கூறுகின்றார்கள்

"[illegible]

[illegible]" எனவும்

ஈஸ்வாஸ்யோபநிஷத் கூறுவதைக்காணலாம். ஆதலால் இப்பரம்பொருளை உருவமைத்து ஆலயம் அமைத்து வழபடுவதே சிறப்பான முறை எனலாம். விஸ்வவஸ்து என்பது போல ஆலய அமைப்பு திருவுருவ அமைப்பின் வழிமுறைகளைக் கூறும், கிரந்த நூல், விஸ்வகர்மியம், மாசாரம் எனவும் விக்கிரகங்களைச் செதுக்கும் சிற்பிகள் விஸ்வகர்மா எனவும் போற்றப்படுகிறார்கள் என்பது வெளிப்படையாகும்.

**பரம்பொருளாகிய இறைவன் அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய் இப்பாலுக்கு இப்பாலாகவும் வியாபித்துள்ளது. அது தூரமாகவும் நெருக்கமாக சமீபமாகவும் நமது உள்ளும் புறமும் செறிந்துள்ளது எனலாம். நகர்ந்து சலனமாகவும் சலனமுற்றதாகவும் விளங்கும் அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய் என்பது விநாயகர் அகவல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தன் திருவடிக்கப்பாலுக்கப்பாலாய்
ஒத்தவுமாமீசன் தானான உண்மையளே

திருமந்திரம்

அவர் எங்கும் நிறைந்தவர். அப்படியானால் எப்படி ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு செல்லுதல். காட்டும் எல்லா வஸ்துக்களும் நகர்ந்து கொண்டே உள்ளது. எனவே அதனுள் செறிந்த அவனும் நகருகிறான் என்றே கொள்ளலாம். அதே போல எம்மையும் எமது செயலையும் வாழ்க்கையையும் ஆயுளையும் நகர்த்தி வருவதனால் எமக்கு இறைவன் செயல் புலப்படுகின்றது.

மக்களுடைய எண்ண அலைகள் அறிவு, ஆற்றலைத் தூண்டிவிட இருஷிகளும் முனிவர்களும், ஞானிகளும், வேதபுராணங்களும் சாதாரணமாகப் பார்ப்பதற்கு எதிர்மறையாக தோற்றமளிக்கும் விளக்கங்களைத் தந்துள்ளனர்

இதையே உருவன்று அருவன்று உளது அன்று
இலதன்று இருந்தன்று, ஒளியன்று எனவே நின்றுவுவே- என்பது

அனுபூதிவாக்கு

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் முருகா குகனே- என்பதும் காண்க.

எனது சாதாரண மக்களின் வாழ்வு சிறந்திட மன அமைதிபெற கண்களால் மெய்யுணர்வினால் மனமுவந்து தரிசித்து அர்ச்சித்து முத்தியின்பம் பெறக்கூடியதே திருவுருவழிபாடு ஆகும் என்பது தெளிவாகும்.

# பூஜை

சமயத்தின் அடிப்படை உயர்ந்த லட்சியம் சாதாரண அறிவு மட்டுமல்ல புத்தியின் உணர்வைக்கொண்டு உதவியைக் கொண்டு பரம்பொருளை ஊகிக்கின்ற திறன் மட்டுமல்ல அந்த ஞான அனுபவம் உண்மையில் புலன்களினாலும் மனத்தினாலும் அறிவினாலும் அறிகின்ற அறிவிற்கு அப்பாற்பட்ட தன்மை எனலாம். இதனை ஆங்கிலத்தில் (இன்டியூஷன்) எனவும் வடமொழியில் அபரோக்ஷ அனுபூதி எனவும் கூறுவர். அதாவது எல்லாப் பொருளிலும் எல்லா இடங்களிலும் நிறைந்த உள்ளும் புறமும் உள்ள ஓர் உன்னதமான மெய்ப்பொருளாகிய இறைவனை நினைத்து முறைப்படி நேர்முகமாக ஆராதனை செய்வதே பூஜையாகும்.

இருஷிகளும் வேதசாஸ்திர ஞானிகளும் சிவாச்சாரிய பக்தர்களும் தம்மைப்போலவே மெய்ஞானிகளாகவும் சிறந்த ஆசார நன்னெறி சமய சாஸ்திர உணர்வு தயை பொறுமை சாஸ்திர ஆராய்ச்சி கர்மானுஷ்டானம், பகுத்தறிவு, சிவஞானம் பெற்று வளர வேண்டுமென்ற நல்நோக்குடன் உலக மக்கள் வளர வேண்டும், நல்வாழ்வு பெற வேண்டும், என்ற நல்லெண்ணம் உள்ளம் போன்ற குணாதிசயங்களுடன் தெய்வீக மார்க்கப்பற்றுக் கொண்ட அனுபூதி பெற்று உலகம் உய்ய வேண்டுமென்ற நிலைப்பாட்டில் செயற்பட்டு வந்தனர்.

தெய்வீக வழிபாட்டினை சுருக்கமான ஐந்து முன்னேற்ற நிலைகளை நெறிப்படுத்தினர்.

(1) பூஜை (2) ஜபம் (3) யோகம் (4) தியானம் (5) ஞானம் என்ற நிலையை ஏற்படுத்தினர். இது எவர்க்கு மனஉறுதியுடன் செய்யக்கூடியவை எனலாம். திருவந்த மாலைப் பதிகங்களைப்படித்து உணர்ந்து தெளிவுற்றால் எமக்கு இந்தப்பிறவி கிடைத்த பலனையும் நாம் தினமும் செய்யும் வழிபாட்டுத்தன்மையையும் திருவந்தமாலையில் காணலாம். எமது உடம்புக்கு அமைந்த அங்கங்கள் அவைகளின் செயல்கள் எல்லாம் இறைவன் திருக்கோலத்தையும் ஆலய வழிபாட்டின் சிறப்பையும் கூறுவதாகும்.

முதல்நிலை தூயபிராணசரீரத்தை சுத்திசெய்வது
இரண்டாவது மனித உணர்வுகளை சுத்தி செய்வது
மூன்றாவது சாதாரண மனநிலைக்கு அப்பாற்பட்டவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவது மனோதீத தியானநிலையை சுத்தி செய்வது
ஐந்தாவது தாம் பூஜிக்கும் தெய்வத்துடன் தன்னை நிலைப்படுத்தி
தியான நிலையில் தொடர்பு பெறுதல்

என்பனவாகும். விஸ்வாசம் என்பது பரவஸ்துவான தெய்வமாகும். மெய்ப்பொருளை மெய்யுணர்வு பெற்று வழிபடும் முறையாகும்.

பூஜை என்னும் பதம் கடவுளை ஆராதனை செய்தல் போற்றுதல் துதித்தல் வணங்குதல் எனப்பொருள்படும். பெரும்பான்மையான மக்கள் சைவசமய அனுஷ்டானங்களை படித்தும் சன் மார்க்க நிலைகளை கற்று உணர்ந்தும் செயலால், அறிவினால் இறைவனையும் அதனை வழி படும் நியமங்களையும் அறிந்து பெருமையுடன் வாழ்கின்றனர். அவர்கள் உள்ளம் தமோ குணத்தை விளக்குகிறது. இப்படியான நிறைந்த தமோகுணநிலையில் வாழும் மக்களிற் சிலர் அறிந்தும் உணர்ந்தும் ஆத்ம அனுபவத்தை மறந்து காலப்போக்கிற்கு அமைவாக மாறிச் செயல்படு வதை பார்க்கும் போது மனம் வேதனை அடைகின்றது. இப்படி தவறுபவர்களை நல்வழிப்படுத்த சமய ஆசாரம், விரதம், தியானம், பூஜை, கற்பேதங்கள் மூலம் தம்மை லயப்படுத்த முயற்சி செய்வதே சாலச்சிறப்புடையதாகும்.

பூஜைகளைச் செய்யுமுன் சில நியமங்களை நாம் கடைப்பிடிக்க வேண்டும். இவை சாஸ் திர அடிப்படையானவை. சௌசம், ஆசமனம், தந்தசுத்தி, ஸ்நானம், சந்தியாவந்தனம் செய்தபின் சுவாமிகளைச் சுத்தி செய்து தியானம், ஆவாகனம், நேவேத்தியம், அர்ச்சனை, கற்பூரதீபம், ஜபம், பிரார்த்தனை என்பன முறையாகும்.

தேவர்கட்கு அர்ச்சனை செய்வதனால்

[illegible]

என்பது வாக்கியம். சகல நலன்களையும் முத்தியின்பமும் கிடைக்கும் என்பது பொருள். பூஜையின் அம்சம் ஆலயஅமைப்பு, பிரதிஷ்டை, அபிஷேகம், நேவேத்தியம், தீபம், தீபஉபசாரம், அர்ச்சனை, கற்பூராராத்திரிகம், வேதம் ஸ்தோத்திரம், திருமுறை ஓதுதல், பிரதெஷிண நமஸ்காரம் என்று இருப்பதைக் காணலாம்.

ஒரு உருவத்தை நகர அமைப்பு,ஆலய அமைப்பு பூசகர் விருத்திற்கு ஏற்ப மானசார சாஸ்திரப் படி கற்சிலையாக லோகமூர்த்தியாக அமைத்து, ஆலயம் அமைக்கும் இடத்தை சுத்தி செய்து பசுக்களை கட்டி உழுது நவதானியம் விதைத்து நன்முகூர்த்தத்தில் சிற்பாசாரிய சிவாசாரியார் களை அழைத்து முறைப்படி சங்குஸ்தாபனம், சிலாஸ்தாபனம் செய்து ஆலயத்தை அமைத்து நல்ல சுபவேளையில் விதிப்படி விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்து மண்டலாபிஷேகம் வரை செய்து நித்திய, நைமித்திய பூஜை உற்சவங்களை நடத்துதல் முறை எனலாம்.

ஆலயத்தில் கிரியை செய்யும் போது சிவாசாரியாரிடம் ஐயம் உள்ள வார்த்தைகள் பேசுதல் அவரின் மனோநிலைக்கு மாறான வார்த்தைகள் சொல்லி அவரின் தூயசிந்தையை சிதறும் படி நடத்தல் மகாகோடி பாபமாகும்.

இனி அபிஷேகத்தின் பலன் சிலவற்றை கீழ்த்தருகின்றோம்.

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | இலட்சுமிகரம் |
| அரிசிமா | தூய மனச்சித்தி |
| மஞ்சள் மா | சௌபாக்கியம் |
| அபிஷேகப்பொடி | மலநாசம் |
| பஞ்சகவ்வியம் | மனச்சுத்தி |
| பஞ்சாமிர்தம் | சித்தசுத்தி |
| பால் | மனசாந்தி |
| தயிர் | ரோக ஆரோக்கியம், பசிநீக்கம் |
| நெய் | மோக்ஷம் |
| தேன் | புத்திமேன்மை |
| இளநீர் | ஆரோக்கியம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பழவகை | சாந்தி |
| அன்னம் | சுபீக்ஷம் |
| விபூதி | இலபிராப்தி |
| சந்தனம் | புக்ஷ்டி |

இவ்விதமான கருத்து வகைகளையும் நம்பிக்கையும் கொண்டு செய்வதனால் நமக்கு வளர்ச்சி, ஞானம், பொருள், குடும்பவிருத்தி, கல்விமேன்மை உண்டாகின்றன.

பார்ப்பான் அகத்திலே பால்பசு ஐந்து உண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்து திரிவன
மெய்ப்பாடும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசு ஐந்தும் பாலாகச் சொரியுமே- என்பது திருமந்திரம்.

இந்த உயர்ந்த நிலையை நாம் அடைய முடியாத தன்மையால் நாம் விக்கிரக வழிபாடு, அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், தூபதீபம், அர்ச்சனை வழிபாடுகளால் எம்மை இறைவன் பால் அர்ப்பணித்தல் முறையாகக் கொண்டதாகும்.

சில அஞ்ஞானவாதிகள் இவைகளை மனதினால் நினைப்பதும் இல்லை செய்வதும் இல்லை. புறங்கூறித்திரிவது அவர்களது செயலாக உள்ளது. இத்தன்மையின் பலனையே இன்று நாம் தள்ளப்பட்டு வாழ்கின்றோம். நேவேத்தியம் என்பது இப்புனிதமான அன்னம், பக்ஷணம், பழ வகைகளை இறைவன் முன்வைத்து அவருக்கு அறிவிப்பதே நேவேத்தியமாகும். எனவே எமது சமய சாஸ்திரம் கரை காணமுடியாத சமுத்திரம். ஆனதால் நாம் ஏதோ அறிந்த அறிவை முற் கொண்டு இறைவனது திருவருட் துணையை கருவியாக வைத்து வழிபாட்டு முறைகளைச் செய்து அவருக்கு அர்ப்பணிப்பதே எமது கடன் என்பதாகும்.

சைவம் வளர சமய சாஸ்திர உண்மை உலகில் ஓங்கி உயர்வு பெற
ஆலய நித்திய நைமித்திய கிரியைகள் வளர உலகம் உய்ய என
பிரார்த்தனை செய்வோமாக.

இக்கும்பாபிஷேகமலர் சிறப்புற மக்கள் மனதில், மனையில் வாடாத மலராக வளர்க என ஸ்ரீ ஆலடி விநாயகர் திருத்தாள் பணிந்து போற்றுகின்றேன்.

# மோதகத்தின் தத்துவம்

கணபதி வழிபாட்டில் மோதகம் மிக முக்கியமான நிவேதனப் பொருள். மோதகம் விநாய கரின் வயிற்றைக் குறிக்கும். வயிற்றினுள் சகல புவனங்களும் அடங்குவதை உள்ளீடாகிய பருப்பு, தேங்காய்த்துருவல், சர்க்கரை, ஏலம் என்பன குறிக்கும். மற்றும் மோதகத்தின் உள்ளே பருப்பு, தேங்காய்த்துருவல், சர்க்கரை ஆகிய மூன்றும் மாவால் மூடப்பட்டிருக்கின்றது. மாவாகிய பாகம் மாயை. பருப்பு சத்தி, தேங்காய்த்துருவல் புத்தி, சர்க்கரை ஆனந்தம். அவர் திருக்கரத் தில் உள்ள மோதகமும் இவ்வுண்மையை எடுத்துக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலடி விநாயகர் கும்பாபிஷேகம்

**"வேதாகமமாமணி" சோ. இரவிச்சந்திரக்குருக்கள்**
ஸ்ரீ பத்திரகாளி தேவஸ்தான ஆதின கர்த்தா
திருக்கோணமலை.

சிவபூமி என்று அழைக்கப்படும் இலங்காபுரியில் பூர்வவாகத்தை தட்சண கைலாசம் எனப் படும் திருக்கோணமலையில் அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுக்கு ஈசானத்தில் எழுந்தருளி அருள் பாலித்துக்கொண்டிருப்பவர் ஆலடி விநாயகப் பெருமான். திருக்கோணேஸ்வரம், பத்திர காளி அம்மன் கோவில், முத்துக்குமாரசுவாமி கோவில், வில்லூன்றிக் கந்தசுவாமிக் கோவில், விஸ்வநாதசுவாமி சிவன் கோவில், மடத்தடி மாரியம்மன் கோவில் ஆகிய வரலாற்று சரித்திர முடைய ஆலயங்களுள் ஆலடி விநாயகர் ஆலயமும் ஒன்று.

ஆலடி விநாயகர் ஆலயத்தில் சைவப் பெருமக்கள் எந்தக் காரியத்தைச் செய்ய முன்பும் ஆலடி விநாயகருக்கும், பத்திரகாளி அம்மனுக்கும் பூசை, அர்ச்சனை, நேர்கடன்கள் செலுத்தி தம் காரியத்தை செய்வர். ஒரே நேரத்தில் இரண்டு ஆலயங்களையும் தரிசிக்கும் வாய்ப்பு பெற்ற வர்கள் தட்சண கைலாச வாசிகள்.

விநாயகப் பெருமானின் கும்பாபிஷேகத்தை தலைமை தாங்கி காரியங்களைச் செய்ய என்னை பணித்துள்ளனர்.

என்னைப் பொறுத்தவரையில் திருக்கோணமலையில் உள்ள சகல ஆலயங்களும் ஆகம நெறி தவறாமல் சிறப்பாக நடைபெற வேண்டுமென்பதே எனது நோக்கமாகும். இதனை கருத்திற் கொண்டு இப்பணியும் அம்பிகையின் திருவுள்ளம் என்று நினைத்து மனங்குளிர்ந்து பணியை நடத்துகிறேன்.

ஆலடி விநாயகர் தேவஸ்தான பிரதம குருவும் தர்மகர்த்தா வேதாரணிய சைவ ஆதின பரம்பரை வழிவந்த சு. கு. முத்துக்குமாரசுவாமி குருக்கள், அன்னை பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதிஷ்டா சிவாச்சாரியர் சாமி. விஸ்வநாதக்குருக்களும் சேர்ந்து மகா கும்பாபிஷே கத்தை நிறைவேற்றுகிறார்கள் என்னும் போது எனது உள்ளம் புல்லரிக்கின்றது. எமது ஆலயச் சூழல் பன்மடங்கு புனிதமடையப் போகிறது என்றும் மகிழ்ச்சிப்பிரவாகமே.

கும்பாபிஷேக யாகங்களை சிறிது நோக்குவோம். இராமாயணம், மகாபாரதம் காலங்களில் அசுவமேத யாகம், சோமயாகம், ராஜ சூயம், சௌத்திராமணி, கணபதி ஓமம், சண்டி ஹோமம் போன்ற யாகங்கள் நடைபெற்றதை இதிகாசங்கள் மூலம் நாம் அறிவோம்.

மூலமூர்த்தி விநாயகருக்கும், பஞ்சமுக விநாயகருக்கும் பஞ்சகுண்ட பச்ச மகா யாகம் அமைத்து கும்பாபிஷேகம் செய்ய திருவருள் கூடியுள்ளது. யாகத்தில் வேதிகையில் பிரதான கும்பமும் சுற்றிவர அஷ்ட வித்திகேசுவரர்களும், யாக யாகேஸ்வரி, சந்திர கும்பம், விம்சோத்தரி கும்பங்களும் சுற்றிவர அமைக்கப்படும்.

யாகமண்டபமானது ஷடத்துவாக்களின் வடிவமாகவுள்ளது. யாகசாலை எங்கும் சாந்திய தீதாகலா சொருபமாம். கிழக்குத்துவாரம் முதலிய நான்கு துவாரங்களும் சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவர்த்தி என்னும் காலத்துவா வடிவாயுள்ளன. மண்டபத்தின் நடுப்பாகம் ஐம்பத்தாரு வர்ணாத்துவா வடிவமாகவுள்ளன. கும்பங்கள் பதினொரு மந்திராத்துவ வடிவமாகவுள்ளன. ஓமத் திரவியங்கள் முப்பத்தாறுதத்துவாத்துவா வடிவாகவுள்ளன. மண்டபம் அமைக்கப்பட்ட இடம் இருநூற்றிருபத்துநான்கு புவனாத்துவா வடிவாகவுள்ளது. சைவபூஷணத்திற் காணப்பட்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு வாசல்கள் வேதங்களாகவும் அமைக்கப்படும் பஞ்ச குண்டங்கள் ஈசானம், தற்புடம், அகோரம், வாமதேவம், சத்யோதாவம் எனப்படும்.

யாகத்தில் பாவிக்கப்படும் தானியங்களினதும், சமித்திக்களினதும் பலன்களை ஆராய்வோம்.

**நெய் :** அக்னிக்குப் ப்ரீதியானது. அதனால் அவன் திருவருள் பெற வழிசெய்கிறது. நெய் வஜ்ர மானது என்பர். ஆக அதனால் இடையூறு நீங்கி உடல்பலம் பெருகும்.

**தேன் :** மகதீ என்ற நற்பலனைத் தரும் தேவதையின் அருளை இந்தத் தேனை ஆகுதி செய்வதால் பெறுகிறோம்.

**அரிசி :** அஷ்ட வசுக்களைத் திருப்திப் படுத்த அரிசியை ஆகுதி செய்கிறோம். அஷ்டவசுக்கள் யார்? தர, த்ருப, சோம, ஸ்வாப, அனல, அனில, ப்ரத்யுட்க்ஷ, பிரபாஸ முதலான ரிஷிகள் ஆவர்.

**அவல் :** ருத்ரனுக்குப் ப்ரீதியான ஆகுதிப் பொருள் இது.

**பொரி :** சூரிய பகவானுக்குப் ப்ரீதியான ஆகுதி.

**கோதுமை :** நட்சத்திரங்களுக்குப் ப்ரீதியான ஆகுதி.

**நெல் :** சகல தேவதைகளுக்கும் ப்ரீதியான ஆகுதி ஆகும்.

**வில்வம் :** இந்தச் சமித்தினால் ஹோமம் செய்தால் ராஜ்ய சம்பத்து. வில்வப்பழ ஹோமத்தால் சக்தி செல்வங்களையும் பெறலாம். சிவசக்தி சம்பந்தமான சண்டி ஹோமம் போன்ற யாகங்களிலும் வில்வம் ஸமித்தாகப் பயன்படுத்தினால் பலன்கள் நிறைய உண்டு.

**துளசி சமித்து :** இதனால் ஹோமம் செய்தால் நீண்ட நெடுங்காலமாக விவாகம் ஆகாதவர்களுக்கு விவாகம் நடைபெறும். எண்ணிய எண்ணங்கள் கைகூடும்.

**பலாஸ" சமித்து :** இதுவே முருக்கு. இது சந்திர கிரஹ சமித்தாகும். இதனால் சந்திரகிரஹ பிரீதியாகும். பிரம்ம தேஜஸ"ம் பெறலாம். பலாஸ" புஷ்பத்தால் எல்லா இஷ்ட காரியங்களும், பலாஸ" ரஸத்தால் ஞானவிருத்தியும் விசேஷமான புத்தியும் பெறலாம். இப் பலாஸ" குச்சிகளை அக்னி ஹோத்திரம் செய்து அதனால் ஸ்நாநபானம் செய்யின் ப்ரம்ம ஞானம் அடைந்து பரப்ரம்ம சொரூபம் அடையலாம்.

**அரசங்குச்சி :** பலாசு இல்லாத குறையை அரசு நீக்கும். இது குரு கிரஹத்தின் சமித்தாகும். அரசு மரத்தின் சமித்தால் தலைமைப் பதவி வரும். யுத்தத்தில் ஜெயமடைந்து அரச தன்மை கிடைக்கும்.

**வெள்ளை எருக்கு :** இது சூர்ய கிரஹத்தின் சமித்தாகும். இம்மூலிகை சர்வாகர்ஷணம் பொருந்தியது. வசியம், மோகனம் ஆகிய அஷ்டமா சித்துகளையும் அடையலாம். இச்சமித்துகளால் ராஜ வசியம், ஸ்திரீ வசியம், மிருக வசியம், ஸர்ப்ப வசியம், லோக வசியம், சத்ரு வசியம், தேவ வசியம், ஆக சர்வ வசியங்களையும் அடையலாம். எடுத்த வேலை இனிதே முடியும்.

**செம்மர சமித்துகள் :** இது அங்காரஹ கிரஹ சமித்தாகும். இதனால் ரண ரோகங்கள் தீரும். தைர்யம் பெருகும்.

**நாயுருவிச் சமித்து :** இது புத கிரஹ சமித்தாகும். இதனால் லக்ஷ்மி கடாக்ஷம் ஏற்படும். நல்ல த்வனி உண்டாகும். அபஸ்மாரமும் போகும். சுதர்சன ஹோமத்திற்கு இதுவே சிறந்தது.

**அத்தி சமித்து :** இது சுக்கிர கிரஹத்தினுடைய சமித்தாகும். பித்ரு ப்ரீதி பெற்று விரும்பிய பொருள்கள் கைகூடும். மற்றும் பில்லி, சூன்யம் பிசாசு பயங்களிலிருந்து விடுவித்து சத்ருக்களை வெல்லும். பைத்தியமும், மேக ரோகங்களும் அகலும், வாக்கு சித்தியும் ஏற்படும். பசு, யானை குதிரை, நோய் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வன்னி சமித்து :** இது சனி கிரஹத்தினுடைய சமித்தாகும். இதில் அக்னி பகவான் இருப்ப தாகப் புராணவரலாறு கூறுகிறது. வன்னி சமித்து யாகபஸ்மாவைத் தரித்தால் அது நெற்றியில் எழுதியிருக்கும் யாக சம்மந்தமான எழுத்தைத் தொலைத்து விடும். இது நிச்சயம். இத்தகைய சமித்து பஸ்பம் பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரராகிய இம்மூவரையும் மூவுலகினையும் மூன்று அக்னிகளையும், முக்குணங்களையும் குறிப்பதாக இருக்கிறது. இத்தகைய பஸ்மாவைத் தரிப் பதன் மூலம் மகா பாதகங்களால் உண்டான தோஷங்களிலிருந்து கணத்தில் விடுபடலாம். சகல தெய்வ, தேவாதிகளும் இச்சமித்தால் சந்தோஷமடைகிறார்கள். பூகம்பங்களால் உண்டாகிற பயங் கள் நீங்கும். சகல தோஷ நிவர்த்தியாகும். வீட்டில் பாம்புப்புற்று, எறும்புப்புற்று ஏற்படாது. செயல் செய்யும் வலிமை இதற்கு உண்டு.

**தர்ப்பை :** கேது பகவானுக்குப் ப்ரீதியான சமித்து. இது ஞான விருத்தியைத் தரும்.

**அருகம்புல் :** இது ராகுகிரஹ சமித்தாகும். இதனால் பூர்வ கர்ம வினைகளும் சகல இடையூறு களும் நீங்கி காரியம் சித்தியடையும். இதனால் சர்வஜன ஆகர்ஷணம் உண்டாகும். கீர்த்தியும், புகழும் பெறலாம். அறிவும், அழகும், வசீகரமும். உண்டாகும். கணபதி ஹோமத்திலும் இதைப் பயன்படுத்தலாம்.

**கரும்பு :** கரும்புத் துண்டுகளையாவது அல்லது கருப்பஞ்சாறாவது ஓமம் செய்தால் வரனுக்கு விரும்பிய கன்னிகையும், கன்னிகைக்கு விரும்பிய வரனும் கிடைப்பார்கள். இதையும் கணபதி ஹோமத்தில் பயன்படுத்துவர்.

**ஆல சமிது :** இது ம்ருத்யஞ்சய வேள்வியின் முக்கிய சமித்து. யமனுக்குப் பிரீதியானது. இதனால் ரோகம் நீங்கும். ஆயுள் நீடிக்கும்.

**எள்ளு :** இதை ஆகுதி செய்ய பல ஜன்மாக்களில் செய்த பாவங்கள் நீங்கும், தீராத கடன் தொல்லை தீரும்.

**புங்க மரம் :** இது வெற்றி தரும் சமித்து

**தேவதாரு :** இந்த சமித்தினால் ஓமம் செய்தால் சகல தெய்வ தேவதைகளும் வேண்டிய வரங் களைக் கொடுப்பார்கள்.

**சந்தன மரம் :** இதனால் ஓமம் செய்தால் மூதேவி முதலிய சகல பீடைகளையும் விலக்கி லக்ஷ்மி கடாக்ஷம் ஏற்பட்டு சகல சம்பத்துடன் வாழ்வார்கள்.

**வேங்கை மரம் :** இந்த சமித்தினால் ஓமம் செய்தால் பில்லி, சூன்யம், ஏவல், பிசாசு, பயம், ஒழியும். கவர்ச்சி ஏற்படுத்தும்.

**மகிழம்பூ :** இந்த சமித்தினால் ஓமம் செய்தால் சகல துக்கங்களும் நிவர்த்தியடைந்து சிக்கல் கள் எல்லாம் தீரும். மனம் சாந்தி பெறும்.

**புவி அரசு :** இதுவே பூவரச மரமாகும். இது பூலோக அரசமரம் என்று வழங்கப்படும். அரசு சமித்து இல்லாத குறையை இந்த சமித்து நீக்கும். அரச சமித்தின் பலன் இதற்கும் உண்டு.


**நவதான்யங்கள் :** அந்தந்த கிரகங்களுக்குரிய தானியத்தால் நவக்ரஹ ஹோமம் செய்தால் கிரஹ தோஷங்கள் விலகும். சுபிட்சம் நிலவும்.

ஆலடி விநாயகர் கும்பாபிஷேகம் திருக்கோணமலை சைவப் பெருமக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமையும்.

கும்பாபிஷேக மலருக்கு இவ்விஷயதானங்களை பிரசுரித்த ஆலடி விநாயகர் ஆலய ஸ்ரீலஸ்ரீ சு. கு. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள், மு. சுந்தரலிங்கதேசிகர், மு. சண்முகரெத்தினக் குருக்கள் ஆகியோருக்கு அம்பாளின் திருவருள் என்றும் துணை நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலடி விநாயகர் தேவஸ்தானம் மடலயமாக இருந்த கட்டடத்தை சாத்திர விதிப்படி கற்பக்கிரகம், ஏகதல விமானம் அமைப்பதற்கு சங்குஸ்தாபனம் செய்வதற்காக வீதி வலம் வரும் காட்சி

இடமிருந்து வலமாக

வேதாரணியமாதீனம் **சு. கு. முத்துக்குமாரசுவாமிக்குருக்கள்** (தற்போதைய தர்மகர்த்தா)
**ஸ்தபதி. சு. நவரட்ணம் ஆச்சாரியார்**
**பிரம்மஸ்ரீ. தி. ச. சிவசுப்பிரமணியக்குருக்கள்** (வெள்ளை ஐயர்)
**சு. கு. சோமஸ்கந்த ஐயர்** (பிரதமகுரு, ஆதீன கர்த்தா ஸ்ரீ பத்திரகாளி கோயில்)
**மு. சண்முகரெட்ணக்குருக்கள்** (தேவஸ்தான இளவரசு)
**மு. சுந்தரலிங்க தேசிகர்** ("சுத்த கணித சோதிடர்", "ஜோதிட வை சித்தாந்த சேகரம்")



1970ம் ஆண்டு கற்பக்கிரகத்துக்கு அத்திரவாரம் இடுதல்

இடமிருந்து வலமாக

வேதாரணியமாதீனம் **சு. கு. முத்துக்குமாரசுவாமிக்குருக்கள்** ( தற்போதைய தர்மகர்த்தா)
**மு. சண்முகரெத்தினக்குருக்கள்** (தேவஸ்தான இளவரசு)
**கோ. செல்லத்தம்பி** (ஸ்ரீ பத்திரகாளி கோயிலடி பெரும் சமூகத் தொண்டர்)
**டாக்டர். சி. சிவானந்தம்** (அத்திவராம் இடுதல்)
**பா. நேமிநாதன்** (பாராளுமன்ற உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கஜமுகன்போர்க் காட்சி



ஆலடி விநாயகரின் முன்பு இருந்த
மட ஆலயம்



**திருக்கோணேஸ்வர நூல் வெளியீட்டு விழாவில்
முத்துக்குமாரசுவாமி கோயில் பிரதமகுரு
வேதாகமமாமணி இரா. இராஜ ராஜேஸ்வரக்குருக்கள்
நூல்களை வழங்கல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# விநாயகரும் விரதங்களும்

ராஜாமணிக் குருக்கள்
வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ. இரா.ராஜராஜேஸ்வரக்குருக்கள்
பிரதமகுரு முத்துக்குமாரசுவாமி கோயில்
திருக்கோணமலை

சைவ சமயம் சிவ சம்பந்தமுடையது. சிவம் என்னும் சொல் மங்களம், செம்மை, சிறப்பு என்னும் பல பொருள்களைக் கொண்டுள்ளது. சைவ சமயத்தில் காணாபத்தியம், கௌமாரம், சௌரம், சாக்தம், வைஷ்ணவம், சைவம் என்னும் அறுவகைச் சமயத்தவர்க்கும் முழு முதற் பொருளாக விளங்குபவர் விநாயகர்.

விநாயகர் வழிபாடு சைவ சமயிகளுக்கு முதல் வழிபாடாக அமைந்துள்ளது. வழிபாட்டில் முதன்மையைப் பெற்ற விநாயகருக்கு அனுஷ்டிக்கப்படும் விரதங்கள் இரண்டு. கார்த்திகை மாத கிருஷ்ணபக்ஷ பிரதமை முதல் மார்கழி மாத ஷஷ்டி வரை அனுஷ்டிக்கப்படுவது விநாயக விரதம். ஆவணி மாதம் பூர்வபக்ஷ சதுர்த்தித் திதியில் அனுஷ்டிக்கப்படுவது விநாயக விரதம்.

பர்வதராஜன் புத்திரியாகப் பிறந்த பார்வதி தேவி பரமசிவன் கங்கையை மணக்கு முன் தாம் அவரைப் பதியாக அடைய வேண்டுமென்று விரும்பினாள். தந்தை பர்வதராஜனிடம் தன் ஆசையைத் தெரிவித்தாள். எண்ணம் நிறைவேற்றுதற்குரிய விரதத்தை உணர்த்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டாள். அதற்கு பொன்மலை மன்னவன் உள்ளம் மகிழ்ந்து அதற்கு ஒரு விரதம் இருக்கிறது. அது நாற்பயனும் தரவல்லது. அரும்பிய இடரெல்லாம் அகற்றத் தக்கது. பெரும் பிணி முழுவதும் பெயர்க்கத் தக்கது. விரும்பிய பொருளெல்லாம் விளைவிக்கத் தக்கது. நினைத்ததைச் சித்திக்கச் செய்வது. சர்வ ஐஸ்வர்யங்களையும் தரவல்லது; இத்தகைய பெருமை வாய்ந்த விரதம் மும் மூர்த்திகளுக்கும் முதல்வருக்கும் முதல்வராக விளங்கும் சதுர்த்தி விரதமே ஆகும். என்று பர்வதராஜன் கூறினார். அப்போது பார்வதி தேவி " தந்தையே இப்பெருமை வாய்ந்த சதுர்த்தி விரதத்தை யாராவது அனுஷ்டித்திருக்கிறார்களா? " என்று பார்வதி தேவி கேட்க பர்வதராஜன் பின்வருமாறு கூறலானார்.

ஒரு சமயம் தேவரனைவரும் ஒன்று சேர்ந்து சிவபெருமானை வணங்கித் துதிக்கும் பொழுது அவர் மைந்தராகிய சுப்பிரமணியர் அங்கு வந்து சிவபெருமானை வணங்கி விட்டு எண்ணற்ற விரதங்களில் முதன்மையானதும் எளிதில் அநேக வரங்களைக் கொடுக்குந் தன்மை வாய்ந்ததும் மிகவும் மேன்மையானதாயும் இருக்கும் ஒரு விரதத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்டார். அதற்குச் சிவபெருமான் விரதங்கள் அனைத்திலும் முதன்மையான விரதம் விநாயகர் சதுர்த்தி விரதம். அதுவே எல்லா எண்ணங்களையும் நிறைவேற்றக் கூடியது என்றார். அதைக் கேட்டதும் சுப்பிரமணியர் வியப்படைந்து, தந்தையே என்னைச் சிறுபிள்ளை என்று இப்படிக் கூறினீர்களா? அல்லது ஆதி அந்தம் இல்லாது எத்தனையோ எண்ணற்ற விரதங்கள் இருக்கும் போது அவைகளுள் ஒன்றை உபதேசிக்காமல் விநாயகரின் விரதத்தை அதி உன்னதமானது என்று சொல்லுகிறீர்களே அந்த விநாயகர் தங்களுக்குப் பிள்ளையல்லவா, அனைத்துலகுக்கும் ஆதார நாயகனான தங்களை விட அதி உன்னதமானவராக இருந்தாலன்றோ அவரது விரதமும் சிறப்படையும், இவை பற்றி விளக்கம் கூற வேண்டுமென்று கூறினார் முருகப் பெருமான். சிவபெருமான் புன்முறுவல் பூத்து " மைந்தா, ஆதி பரம்பொருள் விநாயகர்தான். அவர்தான் மும் மூர்த்திகளாகிய எங்களையும் தோற்றுவித்தவர்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில் அதர்மங்களை அழிக்கும் பொருட்டு எத்தனையோ முறைகளில் பல்வேறு அவதாரங்களில் தோன்றியுள்ளார். எல்லா மறை நூல்களும் எங்கள் இருவரையும் ஒன்றாக எடுத்தியம்புமே தவிர வேறுபடுத்திக் கூறுவதில்லை. அவரது சதுர்த்தி விரதமே மேலான விரதம். அவ்விரதத்தை அனுஷ்டித்தால் சகல சித்திகளும் கை கூடிவிடும். ஆகவே பெண்ணே! நீ அவ் விநாயகர் சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்து நீ விரும்பிய மணாளனை அடைவாயாக என்று கூறினார். பர்வதராஜன் கூறியதைக் கேட்ட பார்வதிதேவி விநாயகர் சதுர்த்தி விரதத்தை முறையாக அனுஷ்டித்து பரமசிவனை மணாளனாக அடைந்ததை விநாயகர் புராணம் கூறுகின்றது. எனவே ஆன்மாக்களாகிய நாமும் விநாயகர் சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்து சகல ஐஸ்வரியங்களையும் பெறுவோமாக.

**விநாயகர் சதுர்த்தி விரத மகிமை**

அரும்பிய விடரெலா மறுக்கத் தக்கது
பெரும்பிணி முழுவதும் பெயர்க்கத் தக்கது
பெரும் பகை வலிகளும் போக்கத் தக்கது
விரும்பிய பொருளெல்லாம் விளைக்கத் தக்கது
தேவர்க டேவன் சிந்துர முகத்தவன்
மூவர்கள் முதல்வன் முத் தொழிற் குங் காரணன்
மேவர மகிழ் வது விளம்பு நாமமுந்
தாவறு விநாயக சதுர்த்தி யென்பரால்.

சுபம்.



ஐந்து அடுக்குத் தீபம் - பஞ்ச கலைகளையும்
மூன்று அடுக்குத் தீபம் - முத்தத்துவங்களையும் குறிக்கும்

இத் தீப ஆராதனைகளின் பின் ஆன்ம சுத்தி உண்டாகும்.

| | |
|---|---|
| நாகதீபம் | - புத்திர விருத்தி |
| இடப தீபம் | - பசு விருத்தி |
| புருஷ தீபம் | - சகல சித்தி |
| நட்சத்திர தீபம் | - ரோக நாசம் |
| கும்ப தீபம் | - மல நிவாரணம் |
| ஐந்து தட்டுகள் | - ஐந்து குணங்களும் பதிதற் பொருட்டு |
| தூபம் | - சாரூப பதவி |
| விபூதி | - ரக்ஷைகூடி |
| பஞ்சாலாத்தி | - சர்வஜெயம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லக்ஷ்மி நாராயனனுக்கு
பிரதமகுரு சு. கு. முத்துக்குமாரசுவாமிக்குருக்கள்
பூஜை செய்தல்



திருக்கோணேஸ்வரம் நூல் வெளியீட்டு விழாவில்
திரு. சோ. இரவிச்சந்திரக்குருக்கள்
பிரதி அதிதியாகக் கலந்து ஆசி வழங்கல்



பத்திரகாளி அம்பாள் இராஜகோபுர சங்குஸ்தாபன
நிகழ்வில் திரு. சோ. இரவிச்சந்திரகுருக்களுக்கு
ஆலடி விநாயகர் தேவஸ்தான நிர்வாகி
மு. சுந்தரலிங்கதேசிகர் பொன்னாடை போர்த்தல்



கோணேஸ்வரம் நூல் வெளியீட்டு விழா
ஊர்வலத்தில் சு. கு. முத்துக்குமாரசுவாமி குருக்கள்
மு. சுந்தரலிங்கதேசிகர், சு. பரமேஸ்வரக்குருக்கள்



அனந்த சயன மூர்த்தி கும்பாபிஷேகம்
ஸ்ரீலஸ்ரீ சு. மு. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்



திருக்கோணேஸ்வர நூல் வெளியீட்டு விழாவில்
சு. கு. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்,
மு. சுந்தரலிங்கதேசிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆலடி விநாயகர் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு
திரு. சோ. இரவிச்சந்திரக்குருக்கள்
சங்கு பூஜை



தேவஸ்தான லக்ஷ்மி, நாராயணர்



மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு
திரு. சோ. இரவிச்சந்திரக்குருக்கள்
சங்கு ஸ்தாபனம்



ஆலடி விநாயகர்
வானுயர்படல் சப்பரம்
1972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# விநாயகர் வழிபாடு

Dr. புலவர். சிவஸ்ரீ. வை. சோமாஸ்கந்தக்குருக்கள் D. A. C.

விநாயகன் என்பது வடசொல்லாகும். தனிப்பெரும் தலைவன் என்பது பொருளாகும். முழு முதற் கடவுள் என்றும் பொருள் கொள்ளலாம்.

இந்துமத வழிபாட்டுப் பாரம்பரியத்தில் விநாயகர் வழிபாட்டுக்கு முதலிடம் இருக்கின்றது.

புதுமனை புகுவிழா, திருமண விழா, ஆலய விழாக்கள் அனைத்திலும் முதலில் விநாயகர் வழிபாடு பக்தி சிரத்தையுடன் நடைபெறுகின்றது.

"சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்"

எனத் தொடங்கும் மந்திரம், நம் வழிபாட்டு முறையில் முதல் மந்திரமாகும். வெண்ணிற ஆடை அணிந்தவரும், சந்திரனைப் போன்று வெண்ணிறம் கொண்டவரும், நான்கு கைகள் கொண்டவரும் என்பதாக இந்தப் பிள்ளையார் வணக்கச் செய்யுள் ஆரம்பமாகின்றது.

கஜானனம் பூத கணாதி சேவிதம்.... என்று தொடங்கும் வடமொழிப் பாடலும் எல்லாவித மான தொடக்க வழிபாடுகளிலும் பக்தியோடு சொல்லப்படுவதும் நம் வழிபாட்டு மரபாகும்.

"தன்தோள் நான்கின் ஒன்று கை மிளஉம்
களிறு வளர் பெருங் காடாயினும்
ஒளிபெரிது சிறந்தன்று அளியவென் நெஞ்சே"

என்னும் பாடல்களுள் மிகப் பழமையானதொன்றாகும். தொல்காப்பியம் இளம்பூரணர் உரையில் இப்பாடல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் விநாயகர் வழிபாட்டின் தொன்மையையும் மேன்மையையும் நாம் ஆய்ந்து உணரலாம்.

"எண்ணிய எண்ணியாங் கெய்தும் கண்ணுதற்
பவள மால்வரை பயந்து
கவள யானையின் கழல்பணி வோரே"

இப்பாடலின் முதலடி திருக்குறளில் அப்படியே பயின்று வருவதைப் பார்க்கலாம்.

விநாயக வழிபாட்டு மரபு தொன்மையானது என்பதற்கு இப்பாடல் நல்லதோர் முக்கியமான செய்தியாகும்.

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையிலும், குறிஞ்சி நிலக் கோயில்களிலும் விநாயகப்பெருமான் மலைமீது கோயில் கொண்டிருப்பதைக் காணலாம்.

செந்தமிழ்ப் புலவர்கள் விநாயகப்பெருமானை முழுமுதற் கடவுளாக வழிபட்டது போலவே பொதுமக்களும் முழுமுதலாக விநாயகரை வணங்கி வருகின்றார்கள்.

வினைகளை நீக்குபவனும், விக்கினங்களைப் போக்குபவனும் ஆன விநாயகப் பெருமானை வினைதீர்க்கும் விநாயகன் என்றும், விக்னேசுவரன் என்றும் உலகம் போற்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக வரலாற்றில் பல்லவர் காலத்தில் பரஞ்சோதியார் வாதாபியை வென்று வாதாபி கணபதியை தமிழகத்துக்கு கொண்டு வந்தார். இந்நிகழ்ச்சி மூலம் தொன்மையான விநாயகர் வழி பாட்டுக்கு மேலும் ஒரு மறுமலர்ச்சியை பரஞ்சோதியார் உண்டாக்கினார்.

இதன் காரணமாக விநாயகர் வழிபாட்டிலே வகைகளும் முறைகளும் பலவாறாக வளர்ச்சி பெற்றன.

விநாயகரின் உருவங்களிலும் பல வேறுபாடுகளும் வழிபாட்டு முறைகளில் பல விதி முறைகளும் வளர்ச்சியுற்றன.

இத்தகைய வளர்ச்சியினால் "காணாபத்யம்" என்ற கோட்பாடு முழுவதும் விநாயகர் வழிபா டாக நிலை பெற்றது.

இந்த வளர்ச்சியின் விளைவாக முப்பத்திரண்டு உருவ வேறுபாடுகள் தோன்றி வளர்ந்தன. அவற்றினைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

| | | | |
|---|---|---|---|
| 1. பால | கணபதி | 17. ஏகாக்ஷர | கணபதி |
| 2. தருண | கணபதி | 18. வர | கணபதி |
| 3. பக்தி | கணபதி | 19. திரயாக்ஷர | கணபதி |
| 4. வீர | கணபதி | 20. க்ஷிப்ர பிரசாத | கணபதி |
| 5. சக்தி | கணபதி | 21. ஹரித்ராக | கணபதி |
| 6. துவிஜ | கணபதி | 22. ஏக தந்த | கணபதி |
| 7. சித்தி | கணபதி | 23. சிருஷ்டி | கணபதி |
| 8. உச்சிஷ்ட | கணபதி | 24. உத்தண்ட | கணபதி |
| 9. விக்ன | கணபதி | 25. ரணமோசன | கணபதி |
| 10. க்ஷிப்ர | கணபதி | 26. சண்டி | கணபதி |
| 11. ஏரம்ப | கணபதி | 27. துவிமுக | கணபதி |
| 12. லக்ஷ்மி | கணபதி | 28. திரிமுக | கணபதி |
| 13. மகா | கணபதி | 29. சிங்கமுக | கணபதி |
| 14. விஜய | கணபதி | 30. யோக | கணபதி |
| 15. நிருத்த | கணபதி | 31. துர்க்கா | கணபதி |
| 16. ஊர்த்துவ | கணபதி | 32. சங்கட ஹர | கணபதி |

விநாயகரின் வடிவம் "ஓம்" என்று நாம் ஜபிக்கும் நாமங்களின் முன்வரும் மொழிபேதம் கடந்த ஆதார ஒலியின் அதிர்வு வடிவமே என்று சித்தர்கள் எமக்குத் தெளிவு படுத்தியுள் ளார்கள்.

எல்லா மந்திரங்களினுடைய குறிக்கோளும் ஒலியின் அதிர்வு என்பதுதான் சிந்தனையா ளர்களாகிய சித்தர்களின் மெய்ஞ்ஞான முடிவாகும்.

ஓம் என்ற ஆதார ஒலியே விநாயகர் என்பது சித்தர்களின் தெளிவான சிந்தனை முடிபா கும். ஆன்ம நிலையிலே உதிக்கின்ற பேரின்பப் பரம்பொருள்தான் விநாயகர் என்பதும் சித்தர் கள் முடிபாகும்.

" ஓம் " என்ற ஒலி உலகின் வித்தே கணபதி என்று பதஞ்சலி முனிவர் யோகசூத்திரத் தில் விளக்குகின்றார்.

திருமூலர் விநாயகப் பெருமானை " ஞானக்கொழுந்து " என்று குறிப்பிடுகின்றார்.

ஒரு மந்திரத்தால் ஐம்புலக் கதவை அடைக்கும் உபாயத்தை எனக்குக் குருவடிவாக வந்து விநாயகப் பெருமான் அருளினார் என்று ஔவையார் வித்தக விநாயகப் பெருமானின் விரைகழலில் சரணம் என்கிறார்.

இத்தனை சிறப்பாகவும் தத்துவ நுட்பமாகவும் விளங்குகின்ற விநாயகப் பெருமான், ஆலடி விநாயகப் பெருமானாக அருள் செய்கின்றார். அப் பெருமானைப் போற்றித் துதித்து நலம் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காணாபத்தியம்

ஞானசிரோன்மணி
சைவப் புலவர் பண்டிதர் ஆர். வடிவேல்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே. - திருமந்திரம்

இந்து மதத்திற்கு மூலாதாரமாக விளங்குவது ஸ்ரீசங்கரர் அருளிய அறுவகைச் சமயவழி பாடு. அவை சைவம், சாக்தம், வைஷ்ணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்பன.

கணபதி வழிபாட்டையே பிரதானமாகக் கொண்டு அதனையே ஒரு மதப்பிரிவாக ஏற்பதே காணாபத்தியம். கணபதியையே கண்கண்ட தெய்வமாக ஏற்று, பஞ்ச பூதங்களின் பிறப்பிடமாக வும், பிரம்மா, விஷ்ணு, ருத்திர வடிவமாகவும் அனைவருக்கும் முதற் கடவுளாகவுங் கொண்டு வழிபடுவதே காணாபத்தியத்தின் சிறப்பம்சமாகும்.

இந்துக்களில் சிலர் கணபதியையே பரம்பொருளாக வழிபட்டு வருகிறார்கள். இந்த வழி பாட்டிற்கு காணபதம் அல்லது காணாபத்தியம் என்று பெயர். இந்த வழிபாட்டை நடத்துபவர்கள் காணபதர். இவர்கள், கணபதி மூலாதார சக்தி உருவினர் என்றும்; பிரணவம் என்ற ஓங்கார வடிவினரென்றும் அவருடைய துதிக்கை அந்த ஓங்காரத்தையே குறிக்கும் என்றும் கூறுவர்.

பஞ்ச கிருத்தியங்களுக்கும் கர்த்தாக்களாகக் கூறப்படும் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகிய ஐந்து மூர்த்திகளும் பிள்ளையாராகிய இவரே என்று கூறுகின் றது காணாபத்தியம்.

காணாபத்தியத்தை மேற்கொள்ளுபவர்கள் கணபதி உபாசனையில் சொல்லும் சுலோகம்
"அவ்யாக்ருத பிரும்மனோ குணேசஸ்ய சரீரே
நாபிர் பிரும்மா: முகம் விஷ்ணும்: நேத்ரம் ருத்ர:
வாம பார்ச்வம் சக்தி: தக்ஷிணம் சூர்ய: ஆத்மா
ஸ்மிதாமய:" என்பதாகும்.

இதன் பொருள் - கணபதியுடைய நாபி பிரும்ம ஸ்வரூபம்; முகம் விஷ்ணு ஸ்வரூபம்; நேத்திரம் சிவ ஸ்வரூபம்; இடப்பாகம் சக்தி ஸ்வரூபம்; வலப்பாகம் சூரிய ஸ்வரூபம் என்று மகா கணபதியை உணர்ந்து கொள்வோம்.

சிவபெருமானின் வைகரி வாக்கின் வடிவம் விநாயகர். அதாவது ஒலியின் வடிவம். நால் வகை வாக்கியங்களிலொன்று வைகரி. வைகரி அட்சரங்கள் வெளிப்பட்டுத் தோன்றாதது. பொரு ளுடையதாய் கண்டத்திலிருந்து பிறக்கும் நாதம். சிவனுடைய வாக்கே மந்திரம் அதனால் மா கணபதி மந்திரவடிவானவர் என்பர். அவரை ஓங்கார ரூபியாக வழிபடுகிறார்கள். சிவபெருமானின் வைகரி வாக்காகியமாகிய ஓங்காரத்தில் உதித்த பரம்பொருளாயிருப்பவர் விநாயகர். ஆதலால் விநாயகர் சிவபெருமானின் கண்டத்திலிருந்து அவதரித்தவர் என்றும் கூறுவார்கள்.

பிள்ளையாருடைய வடிவத்திலேயே பிரணவ மந்திரத்தின் உருவத்தைக் காண்கிறார்கள். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனப்படும் பஞ்சபூதங்களால் உருப்பெற்றது இந்த உலகம். இப்பஞ்ச பூதங்களும் முழுமுதற் கடவுளாகிய கணபதியின் உருவத்தில் அடங்கியிருப்பதாகக் கொள்வது காணாபத்தியக் கோட்பாடு.

## திருவுருவ தத்துவம்

காணாபத்தியர் கணபதியின் பெயருக்கும் அவருடைய உறுப்புக்களுக்கும் தத்துவப் பொருள்கள் கூறுவார்கள். கணபதி என்னும் பதத்திலுள்ள "க" என்பது மனோவாக்குகள்; "ண" என்பது அவற்றைக் கடந்த நிலை. அவ்விரண்டுக்கும் ஈசன் கணேசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் "க" என்பது அறிவு; "ண" என்பது வீடு; என்று பொருள்கொண்டு கணேசன் அறிவுக்கும் வீட்டுக்கும் உரிய தெய்வம் என்று கூறுவார்கள். வக்ரதுண்டர் என்னும் அவருடைய பெயர் கொடிய மாயையைத் துண்டிப்பவர் என்றும் லம்போதரர் (பெருவயிறர்) என்னும் அவருடைய பெயர் பிரபஞ்சம் முழுவதையும் உண்டு தம்முள் அடக்கிக் கொள்பவர் என்றும் பொருள்படும்.

விநாயகருடைய திருவுருவம் பக்தர்களுடைய மனத்தின் பரிபக்குவத்திற்கேற்ப முப்பத்திரண்டு வகைகளாகப் போற்றி வணங்கப்படுகின்றது. அவையாவன - பால கணபதி, தருண கணபதி பக்தி கணபதி, வீரகணபதி, சக்திகணபதி, துவிஜ கணபதி, சித்தி கணபதி, உச்சிஷ்ட கணபதி, விக்ன கணபதி, க்ஷிப்ர கணபதி, ஏரம்ப கணபதி, மகா கணபதி, விஜய கணபதி, நிருத்த கணபதி, ஊர்த்துவ கணபதி, ஏகாட்சர கணபதி, வர கணபதி, திரயாக்ஷர கணபதி, க்ஷிப்ர பிரசாத கணபதி, ஹரித்திரா கணபதி, ஏகதந்த கணபதி, சிருஷ்டி கணபதி, உத்தண்ட கணபதி, ரண மோசன கணபதி, துண்டி கணபதி, துவிமுக கணபதி, மும்முகக் கணபதி, பஞ்சமுக கணபதி, யோக கணபதி, துர்க்கா கணபதி, சங்கட ஹர கணபதி என்பன.

தேவர்களைத் துன்புறுத்திய கஜமுகாசுரனை அழிக்கப்பரம் பொருளின் சக்தியே யானைத் தலையும், தேவ உடலும், பூதக் கால்களும், ஐந்து கரங்களுங்கொண்ட விநாயக மூர்த்தியாக ஓங்கார நாதத்திலிருந்து அவதரித்தார் என்பது கந்தபுராண அகச்சான்று. தனக்கு மேலான நாயகர் இல்லாத விநாயகரின் வலதுபாகம் ஞானசக்தி என்றும், இடப்பாகம் கிரியாசக்தி என்றும் கூறுவர். இதனையே சித்தி, புத்தி என விநாயகரின் சக்திகளாகக் கொள்வார்கள்.

அண்டசராசரங்கள் அனைத்துமாயிருக்கும் அன்னை தந்தையரை வலம்வந்து மாங்கனி பெற்ற வரலாற்று நாயகனாகிய விநாயகரின் ஐந்து திருக்கரங்களில், மேலேயுள்ள வலக்கரம் அங்குசமேந்தியது. அது அழித்தற் தொழிலைக் குறிப்பது. பாசமேந்தியகரம் படைத்தற் தொழிலைக் குறிப்பது. கீழேயுள்ள ஒடிந்த தந்தத்தை ஏந்திய கரம், காத்தற் தொழிலைக் குறிப்பது. மோதகமேந்திய இடக்கரம் அருளலைக் குறிப்பது. துதிக்கை மறைத்தலைக் குறிக்கின்றது.

பஞ்ச கிருத்தியங்களையும் செய்யும் விநாயகரின் பெருவடிவம், அன்பும் பக்தியும் நிறைந்த மெய்யடியார்களின் சிறு உள்ளத்துள் அடங்கி அருள்புரிகின்றது. யாரறிவார் இந்த அருளாடலை? அவரே அடியவர்க்கு அறியத்தருகின்றார். மூஷிகம் பிள்ளையாருடைய வாகனம். மூஷிகம் சிறியது. மூஷிகவாகனர் பெருவடிவுடையவர். பக்திவயப்பட்ட மெய்யடியார்கள் மூஷிகமாயிருந்து மூஷிக வாகனராகிய பிள்ளையாரை மனத்திலே வைத்துச் சுமக்கின்ற திருவுரு வதத்துவத்தை ஆலயத் திருவிழாக்களில் நமக்கு உணர்த்துகின்றார் விநாயகர்.

தெய்வத் திருவுருவங்களை வடித்துத்தரும் சிற்பிகளும் ஓவியர்களும் பிள்ளையார் ஒரு காலை மடக்கி இன்னொரு காலை உயர்த்தி ஆசனத்தில் அமர்ந்திருக்கும் வடிவத்தை அமைத்துத் தருகிறார்கள். பிள்ளையாருடைய இந்தத் தோற்றம் இம்மையில் உலக துன்பங்களையும் மறுமையின் உயர்ந்த இன்பங்களையும் சமமாக மதித்து ஈடு செய்வதைக் காட்டுகின்றது. இரு கால்களுக்கும் இடையே தோன்றும் பெரு வயிற்றுக்கு நடுவே சிந்தனையை ஆடாமல் அசங்காமல் சம நிலைப்படுத்தும் யோகநிலையை இதன்மூலம் அவர் உணர்த்துகின்றார். இந்த உலகில் பெறும் அனுபவங்களில் ஊன்றி நிற்பதன் மூலந்தான் மறு உலகில் இணையில்லாத இன்பத்தை அடைய மனதை உயர்த்த முடியும் என்பதை ஊன்றிய காலும், உயர்த்திய காலும் காட்டுகின்றது.

## விநாயக வழிபாட்டு வியாபகம்

காணாபத்தியத்திற்கு ஆதாரமான நூல்கள் கணபதி உபநிடதம், ஹேரம்ப உபநிடதம் என்ற இரு சிறு உபநிடதங்கள், கணேச புராணம், ஸ்காந்தத்திலுள்ள கணேசமான்மியம், முத்தலை புராணம் என்பனவும், கணேச கீதை, கணேச தந்திரம், கணேச கல்பம், விநாயக பரத்துவம் முதலிய தனி நூல்களும் ஆகும். விநாயக புராணத்தை திருவாவடுதுறைக் கச்சியப்ப முனிவர் தமிழில் பாடியிருக்கிறார்.

காணாபத்தியம் என்ற தனிவழிபாடு ஒருபுறமிருக்க, பொதுவாக இந்து மக்கள் அனைவரும் தொழும் தெய்வங்களுள் கணபதியே முதலிடம் பெறுவார். அவருக்கு நடப்பதே முதற்பூசை கணேசனே முழுமுதற் கடவுளாக எல்லாத் தெய்வ பூஜைகளிலும் விளங்குகின்றார். கணங்களுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெல்லாம் நாயகரான அவரது துணையையே நாம் நற்காரியங்கள் எதனைத் தொடங்கினாலும் முதலில் நாடுகிறோம். ஆற்றங்கரையானாலும், குளக்கரையானாலும், வீதியானாலும், அரசமரமானாலும், ஆலமரமானாலும், குடிசையானாலும், கூரையில்லாத கோவிலானாலும் அங்கங்கே எழுந்தருளியிருந்து அருள் பாலிக்கும் பெருமை அவருக்குண்டு.

இந்தியாவில் சிறந்த விஷ்ணுத்தலமாகிய ஸ்ரீரங்கத்தில் விக்கின கணபதி என்றும், திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள் கோவிலில் வெண்ணெய்ப் பிள்ளையார் என்றும், அழகர் கோவிலில் தும்பிக்கை ஆழ்வார் என்றும் பிள்ளையார் வழிபாடு வைஷ்ணவர்களாலும் நடைபெறுகின்றது. சமணர்களும், பௌத்தர்களும் கணபதியை வணங்குகிறார்கள்.

இந்தியாவைத் தவிர நேப்பாளம், திபெத், பர்மா, சீனா, ஜப்பான், மங்கோலியா, இலங்கை, தாய்லாந்து, கம்போடியா, ஜாவா ஆகிய நாடுகளிலும் விநாயக வழிபாடு நடைபெற்று வந்துள்ளது.

விநாயகரை வழிபட்டபின்பே அன்னை பராசக்தி பண்டாசுரனைப் போரிலே வென்றாள். விநாயகரை வழிபட்ட பின்பே சிவபெருமான் திரிபுரதகனம் செய்தார். விநாயகரை வழிபட்டபின்பே வள்ளியை முருகன் திருமணம் செய்தார். வேதவியாசர் மகாபாரதக் காவியத்தை இடையூறின்றி இயற்ற விநாயக வழிபாடு செய்து அவரைக் கொண்டே எழுதுவித்தார். ஔவையார் திருக்கயிலை செல்ல விநாயகரே அருள் புரிந்தார். இவையெல்லாம் புராண வரலாறுகள்.

இராவணனுடைய கர்வத்தை அடக்கி அவன் இலங்கைக்குக் கொண்டு செல்லவிருந்த சிவலிங்கத்தைக் கோகர்ணத்தில் நிலைக்கச் செய்தவர் பிள்ளையார். விபீஷணன் இராமபிரானிடமிருந்து பரிசாகப் பெற்ற ரங்கநாதரின் திருவுருவச் சிலையை ஸ்ரீரங்கத்தில் நிலைக்கச் செய்தவர் பிள்ளையார். அகத்தியருடைய கமண்டலத்திலிருந்து காவிரி தீர்த்தத்தைப் பெருகச் செய்தவர் பிள்ளையார். நம்பியாண்டார் நம்பிக்கு அருள் புரிந்து தில்லையிலிருந்த தேவாரத் திருமுறைகளை வெளியுலகத்துக்குக் கொண்டுவந்தவர் பிள்ளையார். இவையெல்லாம் இதிகாச வரலாறுகள்.

## வழிபாடு

இறை வழிபாட்டில் பலவகையுண்டு. சாஸ்திர ரீதியாகவும், அனுபவ ரீதியாகவும் பல முறைகள் வழக்கில் இருந்து வருகின்றன. பஞ்சாயதன பூஜை என்பது ஒருவகை வழிபாடு. இதில் பஞ்சமூர்த்திகளை ஒரே சமயத்தில் வழிபடுகிறோம். கணபதி, விஷ்ணு, உருத்திரன், பராசக்தி, சூரியன் ஆகியோரை ஏககாலத்தில் பூஜிப்பது பஞ்சாயதன பூஜை வழபடுபவர்கள் ஒவ்வொருவருக்கும் உபாசனா மூர்த்தி எதுவோ அதைப் பீடத்தில் நடுநாயகமாக வைத்துப் பூஜை செய்வார்கள். பஞ்சாயதன ஆராதனையில் மூர்த்திகளை விக்கிரக உருவில் அமைப்பதில்லை. ஒவ்வொன்றுக்கும் ஒரு சின்னம் உபயோகமாகின்றது. கணபதிக்கு சோணா பத்திரமும், விஷ்ணுவுக்கு சாளக்கிராமமும், சூரியனுக்கு ஸ்படிகமும், பராசக்திக்கு அம்பிகம் என்னும் ஸ்வர்ணக் கல்லும், சிவனுக்கு பாணலிங்கமும் இடம் பெறுகின்றன. காணாபத்தியக் கோட்பாட்டின்படி பஞ்சாயதன பூசையில் பிரதானமாகவுள்ள மூர்த்திகளையெல்லாம் தம்முள் தாங்கியவராய் நடுநாயகமாயிருப்பவர் மகா கணபதி.

கடவுளின் உருவத்தை அமைக்க கல், மரம், செம்பு, மண் என்பனவற்றை பயன்படுத்தலாமென்று ஆகமங்கள் கூறுகின்றன. விநாயகரைப் பூஜை செய்வதற்கு மஞ்சள், கல், செம்பு, பளிங்கு, முத்து, பவளம், யானைத் தந்தம், வெள்ளெருக்குவேர், அத்திமரம், அரைத்த சந்தனம், வெண்ணீறு, சர்க்கரை, பசுச்சாணி என்பவைகளால் பிள்ளையாரை அமைக்கலாம். விநாயக சதுர்த்தியன்று பசுவின் சாணி, மஞ்சள், புற்று மண் என்பவற்றால் பிள்ளையார் செய்து வழிபடுவது வழக்கிலிருந்து வருகின்றது. விநாயக வழிபாட்டின்போது கும்பத்திலும் கூர்ச்சத்திலும், ஹோம அக்கினியிலும் விநாயகரை ஆவாகனம் செய்து வழிபடுவதுமுண்டு.

## கணபதி பூசைக்கு உகந்தவை

அறுகம்புல், வன்னி பத்திரம், மந்தாரைப்பூ ஆகியவை சிறந்தவை. தாளம்பூ, துளசி என்பனவற்றால் விநாயகரைப் பூசை செய்தலாகாது. சிவ பூசைக்குரிய எல்லாப் பத்திர புஷ்பங்களும் விநாயக வழிபாட்டுக்கு உகந்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாருக்குகந்த நிவேதனப் பொருட்கள் தேங்காய், வெல்லம், எள்ளுருண்டை, அப்பம், அவல், வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கிழங்குவகைகள், பயறு வகைகள் முதலியன.

## விரதங்கள்

விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களில் ஆவணி மாதம் சுக்கிலபட்ச நான்காம் நாளாகிய சதுர்த்தி மிகவும் சிறப்பானது. இந்நாளில்தான் விநாயகர் அவதரித்ததாகவும் கணங்களுக்குத் தலைவரானதாகவும் கூறப்படுகின்றது.

**வெள்ளிக்கிழமை விரதம்** - வைகாசி மாதத்து சுக்கில பட்ச முதற்சுக்கிரவாரம் தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தவறாது அனுட்டிக்கப்படுவது.

குமாரசஷ்டி விரதம் - கார்த்திகை மாதம் கிருஷ்ணபட்சப் பிரதமை முதல் மார்கழி மாதம் சுக்கில பட்ச சஷ்டி திதிவரையில் இருபத்தொருநாள் அனுஷ்டிப்பது.

சங்கடஹர சதுர்த்தி - மாசிமாதம் தேய்பிறையில் செவ்வாய்க்கிழமையோடு வரும் சதுர்த்தியில் தொடங்கி ஓராண்டு விதிப்படி அனுட்டிக்கப்படுவது.

கணபதியை வழிபடுவதற்கு மிகவும் முக்கியமானது சதுர்த்தி வழிபாடு. இது சுக்கில சதுர்த்தியென்றும், கிருஷ்ண சதுர்த்தியென்றும் மாதம் இரண்டு முறை வரும். சுக்கில பட்ச சதுர்த்தியில் பகல் பூசையும் விரதமும் விசேஷம். கிருஷ்ண பட்ச சதுர்த்தியில் இரவு பூசையும் விரதமும் விசேஷமானது.

## சுஷூப்தி தத்துவம்

கணபதியின் சந்நிதியை அடைந்ததும் நாம் நெற்றியின் இருபக்கக் கன்னங்களிலும் குட்டிக் கொண்டு, தோப்புக் கரணம் போடுகிறோம். இது கணபதி வழிபாட்டுக்கு மாத்திரமே சிறப்பாக உரியது. ஏனைய தெய்வங்களுக்கு உரியதல்ல.

நமது மூலாதாரத்தில் குண்டலினி சக்தியாக உள்ளவர் கணபதியே என்பதை எடுத்துக் காட்டுவதே இந்த இரு வழிபாடுகளிலுமுள்ள முக்கியமான தத்துவமாகும். நெற்றியில் குட்டிக் கொள்வது அங்கே உள்ளடங்கியிருக்கும் அமிர்த கலசத்தை எழச் செய்து அதிலுள்ள அமிர்தம் தேகம் முழுவதும் பரவச் செய்வதற்காகவேயாகும். தோப்புக் கரணம் போடுவது மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தியை சுஷூப்னா நாடிவழியாக தட்டி எழுப்புவதற்காகவேயாகும். இந்த சுஷூப்னா நாடி, அமிர்த கலசம் இரண்டிலுமிருந்து பூரணபலன் பெறுவதே இந்த வழிபாட்டின் நோக்கமாகும்.

விநாயகருக்குமுன் காதுகளைப்பிடித்து, நெற்றியில் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போடுவதற்கு இப்படியும் பொருள் கொள்ளலாம். அதாவது எவ்வளவு உயர்ந்த கௌரவமுள்ள மனிதனானாலும் சிந்தையைக் கட்டுப்படுத்தி வாழ்க்கையில் பணிவுடன் இருக்க வேண்டுமென்பதை இந்த வணக்கம் அடையாளமாகக் காட்டுகிறது. அகங்காரமடங்கி பணிவுவரத் தோப்புக் கரணம் போடவைக்கும் முறை இந்த அடிப்படையில் ஏற்பட்டதாகவும் கொள்ளலாம்.

## பிள்ளையார் சுழி

கணபதி உடல்பலத்துக்கும் ஞானச் செழுமைக்கும் அடையாளமான கடவுள். எந்தக் காரியத்துக்கும் இவை இரண்டும் தேவை. அதனாலேயே எந்தக் காரியத்தையும் தொடங்குவதற்கு முன் அவரை முதலில் வணங்குகிறோம். எழுதும்போது பிள்ளையார் சுழி போடுகிறோம். வேத மந்திரங்களின் முதலெழுத்தாகப் பிரணவம் அமைவது போல எல்லாக் காரியங்களுக்கும் கணபதியை முதலில் வழிபடும் மரபைச் சைவ உலகம் கடைப்பிடித்து வருகின்றது.

ஊமை எழுத்தொடு பேதம் எழுத்துறில்
ஆமை அகத்தினில் அஞ்சும் அடங்கிடும்
ஓமயமுற்றது உள்ளொளி பெற்றது
நாமயமற்றது நாமறியோமே - **திருமந்திரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊமை எழுத்தென்பது பேசா எழுத்து. அஃதாவது "ம்" பேசும் எழுத்து அகரம் - உகரம். அகர உகரங்கள் மகரத்தோடு சேரும் போது "ஓம்" என்றாகும் (அ - உ - ம்) = ஓம். இது பிரணவம். அகரம் - சிவம். உகரம் - சக்தி. ஒலிவடிவமாகிய பிரணவத்திலிருந்து தோன்றியவர் விநாயகர். "முந்தை வேத முதலெழுத்தாகிய எந்தை" என்பது கந்தபுராண அகச் சான்று. எனவே பிரணவ சொரூபியாயிருப்பவர் விநாயகர்.

வேத மந்திரங்கள் முதலில் "ஓம்" என்று தொடங்குகிறது. இந்தப் பிரணவம் விநாயகரின் சொரூபமாதலை அவரது திருமுகம் உணர்த்துகின்றது. பிரணவத்தின் முதலாம், இரண்டாம் எழுத்துக்களாகிய, அகர, உகரங்கள் நட்சத்திரவடிவின. அகரம் -ழ் உகரம் - ழ்இ இவை பேசும் எழுத்து பேசா எழுத்து தண்டவடிவு - ( —— )

சிவமும் (அகரம்), சக்தியும் (உகரம்) நெருப்பும் சூடும் போல அத்துவிதமாய், சைதன்னிய மயமாய் பிரிப்பின்றியிருக்கும். நட்சத்திரவடிவோடு, தண்டவடிவு சேரும் போது உ என்னும் எழுத்து நாத விந்துகளின் வரிவடிவாகி மூலமனு எனப்படும் பிள்ளையார் சுழியாய் அமைவதாகக் காமிகாகமம் கூறுகின்றது.

ஆமை ஐந்து உறுப்புகளையும் தன்னுள் அடக்கிக் கொள்வதுபோல "ஓம்" என்னும் பிரணவத்துள் சிவமும், சக்தியும், விநாயகரும் அடங்குவதால் மூவரையும் (உ) பிள்ளையார் சுழி உணர்த்துகின்றது.

கஜாநநம்.................. ............பாதபங்கஜம்.

கஜா நநம் பூத கணாதி ஸேவிதம்
கமித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்
உமாசுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேச்வர பாதபங்கஜம்.

## ஆலயங்களில் வாத்திய இசைகளும், பலனும்

| | |
|---|---|
| மத்தளம் | - சுகம் |
| பேரி | - புஷ்டி விருத்தி |
| தாளம் | - கிலேச நாசம் |
| கர தாளம் | - அபயம் |
| சல்லரி | - காமிய பயன் |
| நரம்பு வாத்தியம் | - கோடி பலன் |
| துளை வாத்தியம் | - புத்திர பௌத்திர விருத்தி |
| சங்கு | - சத்துரு நாசம் |
| தோல் வாத்தியம் | - பிணிநாசம் |

என்பன
காமிக ஆகமத்தில் கூறப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# அருள்மிகு

# ஆலடி விநாயகர்

Dr. S. சிவானந்தம்

திருக்கோணமலையில் கோயில் கொண்டிருக்கும் ஆலடி விநாயகப் பெருமான் திருக்குடத் திருமஞ்சனம் பெருஞ்சாந்தி விழா மகா கும்பாபிஷேகம் 24 - 10 - 1996 வியாழக்கிழமை நடக்க விருக்கும் இப்புண்ணிய வைபோகத்தை சிறப்பிக்குமாறு அவ்வைபவத்து மலரில் சேர்த்துக் கொள்வதற்காக என்னையும் ஒரு கட்டுரை கேட்டுக் கொண்டார்.

எனது வயது 8 ஆக இருக்கும் வேளையில் அருகில் உள்ள " இராமகிருஷ்ண மிஷன்" பாடசாலையில் படிக்கும் காலம் தொடக்கம் இன்று வரையிலும் ஆலடி விநாயகரைப் பார்த்து இரண்டு கைகளாலும் தலையில் குட்டி வணங்கி பாடசாலையில் ஒரு விதமான தண்டனைக்கும் ஆளாகாமல் நான் படிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வேன். விநாயகர் என்னைக் கைவிட வில்லை. நான் அறிந்த காலம் விநாயகர் ஒரு ஆலமரத்தடியில் ஒரு சிறு கோயிலில் அமர்ந்திருந்தார். அப்பொழுது விநாயகரைப் பரிபாலித்து வந்தவர் தற்போதைய முத்துக்குமார சுவாமி குருக்களின் தகப்பனார் வேதநாயகக் குருக்கள் சுப்பையா குருக்கள் என்பவர். இது ஏறத்தாழ 70 ஆண்டுகளுக்கு முன்பதாக இருக்கும். சுப்பையா குருக்கள் அவர்களுடன் நான் 15, 16 வயதினில் அடிக்கடி பிள்ளையாருடைய பெருமையை கேட்டறிவேன். அவர் எனக்கு கூறியது இன்றைக்கு திருவருளால் திருகோணமலையில் நான் ஒருவனே ஆகலாம். சுப்பையா குருக்கள் கூறுவார்.

எங்கள் பரம்பரை இந்த நாட்டை சேர்ந்தவர் அல்லர். நாங்கள் இந்தியாவில் தமிழ் நாட்டில் உள்ள வேதாரணியத்தில் இருந்து வந்தவர்கள். சில அடியார்களுக்கு தெரிந்ததில் வேதாரணியத்தின் பெருமை. இந்தத் தலத்தில் உள்ள கோயிலை அந்தக் காலத்தில் ஆண்டு வந்த அரசன் தன்னுடைய விருப்பு ஒன்று நிறைவேறாத படியால் கோயில் கதவை அடைத்து வைத்தான். அதற்குப் பின் அப்பர் சுவாமிகளும், திருஞானசம்பந்தரும் சென்று பாடல் பாடி அடைத்த கதவுகளை தாமாகவே திறக்க வைத்தார்கள். இந்த வேதாரணியத்திலிருந்து தான் வேதநாயக குருக்கள் சுப்பையா குருக்கள் திருக்கோணமலைக்கு வந்து ஆலடி விநாயகர் கோயிலை ஸ்தாபித்தார். சுப்பையா குருக்கள் சில சந்தர்ப்பங்களில் எனக்குக் கூறியுள்ளார். காலையின் அன்றைக்கே பிள்ளையாருக்கு நைவேத்தியம் வைப்பதற்காக ஒரு சதமும் இல்லையே என்று எண்ணிக்கொண்டு இருக்கும் வேளையில் எங்கிருந்தோ ஒருவர் வருவார். வந்து ஐயா, பிள்ளையாருக்கு ஒரு கற்கண்டு மோதக பூசை வைக்குமாறு கூறி இந்தாருங்கோ பணம் என்று கொடுப்பார்.

## தற்கால புதுமை

ஆலடி விநாயகர் கோயிலை பரிபாலிக்கும் முத்துக்குமார சுவாமி குருக்கள் பரம்பரைக்கும் பத்திரகாளி அம்பாள் கோயில் ஆதினகர்த்தா அவர்களுக்கும் இடையில் சில பிரச்சனைகள் ஏற்பட்டு நீதிமன்றம் மட்டும் போய் திடீரென விநாயகர் கட்டளைப்படி வழக்கை நிறுத்தி இரண் ஆலயத்தினரும் ஒருவிதமான சமரச முறையால் நடந்து கொண்டனர். இரண்டு கோயிலையும் வழிபடுபவர்கள் ஒருவித வேற்றுமையின்றி நடந்து கொண்டு வந்தார்கள். சமீபகாலத்தில் பத்திரகாளி அம்பாள் கோயிலின் இராஜகோபுரத்திற்கு கல்நாட்டு தினத்தன்று ஆலடி விநாயகர் கோயிலுக்குள் சூ. இரவிச்சந்திரக்குருக்கள் (பத்திரகாளி அம்பாள் கோயில் ஆதினகர்த்தா) சென்று கற்பூரதீப ஆராதனை விநாயகருக்குச் செய்ய சுந்தரலிங்க தேசிகர் அவர்கள் இரவிச்சந்திரகுருக்களுக்கு பொன்னாடை போர்த்தினார். இதை எவருமே எதிர்பார்க்கவில்லை. என்னைப் பொறுத்தளவில் நான் விநாயகருடைய நடத்தக் கூடாத நடத்தி வைக்கும் வல்லமையை உணர்ந்தேன். அதே வேளையில் சக்தியின் வல்லமையை உணர்ந்தேன். சிறிது நேரம் நான் கண்ணால் கண்டது உண்மையோ என்றும் சிந்தித்தேன். எல்லாம் வல்ல விநாயகப் பெரு மான் சகல நலன்களையும் திருக்கோணமலைக்கும் தமிழ் மக்களுக்கும் வாரி வழங்க வேண்டும் என்று போற்றி இக்கட்டுரையை எழுதும் சந்தர்ப்பம் கொடுத்த வேதநாயக குருக்கள் சுப்பையா குருக்கள் சந்ததியினருக்கு எனது நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# ஆலடி விநாயகர் ஆலயம்

இந்த ஆலயம் திருக்கோணமலைப் பட்டினத்தின் மத்தியில் மக்கள் குடியிருப்பு நிறைந்த பகுதியில் அமைந்திருக்கின்றது. திருக்கோணமலையில் மிகப் பிரசித்திவாய்ந்த ஸ்ரீ பத்திரகாளி அம்பாளுடைய ஆலயத்திற்கருகே அதன் ஈசானதிக்கில் அமைந்திருப்பது இவ்வாலயத்திற்கு ஒருதனிச் சிறப்பாகும். ஆலடி விநாயகர் ஆலயத்திற்கு ஈசானதிசையில் சற்றுத் தூரத்திலே ஈழத்தில் மிகப் பிரசித்திபெற்ற பழம்பெரும் க்ஷேத்திரமாகிய தேவாரப் பாடல்பெற்ற திருக்கோணேசர் ஆலயம் தெட்சணகயிலாயம் என்ற திருப்பெயருக்கு லெட்சணமாக மலையுச்சியிற் காட்சியளிக்கின்றது. ஆலடி விநாயகர் ஆலயத்தை வழிபடும் அடியவர்கள் அங்கு நின்றபடியே கோணேசப் பெருமானைக் கைகூப்பி வணங்குவதை காணக்கூடியதாயிருக்கின்றது.

இவ்வாலயத்திற்கு வடக்குத் திசையில் சுமார் 300 யார் தூரத்தில் ஐயனார்கேணி என்ற ஓரிடம் இருக்கின்றது. தற்போது அந்த இடம் மக்கள் குடியிருப்பாகமாறி, வீதிக்கு மாத்திரம் ஐயனார்கேணி வீதி என்ற பெயர் இருந்துவருகிறது. சுமார் 100 வருடங்களுக்கு முன் பன்னகாமத்திலிருந்து (மாத்தளை) கூடாரவண்டிகளில் வியாபாரப் பொருட்களை ஏற்றி வந்து திருக்கோணமலையில் வியாபாரம் செய்யும் வழக்கம் இருந்து வந்தது. வியாபாரத்திற்காக வரும் வியாபாரிகள் மாட்டு வண்டியோடு ஐயனார்கேணி என்ற இடத்தில் தங்கி முகாமிட்டு வந்தார்கள்.

அங்கு ஒரு கேணியும் கேணியடியில் பிள்ளையாரும் இருந்தது. உள்ளூர் வியாபாரிகளோடு வெளியூர் வியாபாரிகளும் தாங்கள் முகாமிட்டுவரும் கேணியடிப் பிள்ளையாரைப் பக்தியோடு வழிபட்டுப் பூஜை செய்து வந்தார்கள். காலக்கிரமத்தில் வியாபார நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட அந்த இடம் மக்கள் குடியிருப்பாக மாறுதலடைந்தது. இதனால் சுமார் 95 வருடங்களுக்குமுன் இங்கிருந்த விநாயகரை எடுத்துவந்து ஸ்ரீ பத்திரகாளி கோவிலுக்கருகே இருந்த ஆலமரத்தடியில் குடிசைக்கோயில் ஒன்று கட்டி அதில்வைத்து வழிபட்டு வந்தார்கள் ஆலமரத்தடியில் வைத்து வழிபட்டு வந்ததால் ஆலடி விநாயகர் என்று அழைத்து வந்தனர்.

அக்காலத்தில் திரு. சின்னையாக் குருக்கள் என்பவர் பூஜை செய்துவந்தார். திரு. சின்னையாக் குருக்களுக்குப்பின் வேதாரணியத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட எமது முன்னோர் வேதநாயகக் குருக்களின் மகன் சிவஸ்ரீ. வே. சுப்பையாக் குருக்களவர்கள் மடாலயம் ஒன்று அமைத்து அதில் விநாயகரைப் பிரதிஷ்டை செய்து பூஜை செய்துவந்தார்.

காலத்திற்குக் காலம் இவ்வூர்த் தர்மவான்கள் ஆலயத்திற்கு கற்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தரிசன மண்டபங்களைக் கட்டிக் கொடுத்தார்கள். 1924 ஆம் ஆண்டில் எழுந்தருளி விநாயகரைப் பஞ்சலோகத்தில் செய்து பிரதிஷ்டை பண்ணப்பட்டது. அன்று தொடக்கம் அலங்கார உற்சவம் நடைபெற்று வந்தது. 1945ம் ஆண்டு சில திருப்பணிகளை நிறைவேற்றி முதன்முதலாக சம்புரோட்சண கும்பாபிஷேகம் நிறைவேறியது.இக்கும்பாபிஷேகத்தை வே. கு. சுப்பையாக் குருக்கள் நடத்தி வைத்தார்.

1959ஆம் ஆண்டு திருக்கோணமலைவாழ் சைவப் பெருங்குடி மக்களின் உதவியினால் முன் மண்டபமும் சிறிய கோபுரமும் அமைக்கப்பெற்று ஆலடி விநாயகராலயம் அழகுப் பொலிவு பெற்றது.

சிறு மடாலயமாயிருந்து வளர்ச்சியடைந்த இவ்வாலயத்திற்கு சைவப்பெருமக்களின் உதவியினால் 1970ஆம் ஆண்டில் கற்பக்கிரகம் புனருத்தாரணம் செய்யப் பெற்று தூபியமைத்து கருவறையில் புதிய விநாயகத் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப் பெற்று 28-01-72 இல் மகா கும்பாபிஷேகம் நிறைவேறியது. இப்பெரும் பணியை சிவஸ்ரீ. வே. கு. சுப்பையாக் குருக்களின் மகனாகிய சிவஸ்ரீ. சு. கு. முத்துக்குமாரசாமிக் குருக்கள் அவர்கள் முன்னின்று நடாத்தி வைத்தார்கள். இவ்வாலயம் தற்போது கற்பக் கிரகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், தரிசன மண்டபம், கோபுரத்தை உள்ளடக்கிய வெளிமண்டபங்களைக் கொண்டது. கற்பக்கிரகம் அழகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதைச்சிற்ப வேலைகளையுடைய ஸ்தூபியைக் கொண்டது. ஸ்தூபியின் மேற்குத் திசையில் தமது மடிமீது எழுந்தருளியிருக்கின்ற தாமரை ஏந்திய தேவியைத் தழுவிக் கொண்டிருக்கும் மகா கணபதியின் சுதைச் சிற்பமும், தெற்கு வாசலில் பாசம் அங்குசம், தந்தம் மாம்பழம் ஏந்திய கரங்களையுடைய விஜயகணபதியின் சுதைச்சிற்பமும் கொண்ட அழகிய கோவிலாக ஆலடி விநாயகர் ஆலயம் விளங்குகின்றது.

அபயம், வரதம், அங்குசம், பாசம் தாங்கிய திருக்கரங்களையுடைய சதுர்ப்புஜ விநாயகப் பெருமான் ஆசனத்தில் அமர்ந்த பாவனையில் கற்பக்கிரகத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். மகா மண்டபம் இவ்வாலயத்தில் வசந்த மண்டபமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இம் மண்டபத்தினுள் பொதுமக்கள் போவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இம்மண்டபத்தின் வடக்குப் பக்கமாக அமைந்துள்ள பீடத்தில் பஞ்சலோகத்தினாலாகிய பஞ்சமுக விநாயகர், நின்ற பாவனை யிலுள்ள பிள்ளையார், மகா விஷ்ணு, மகாலெட்சுமி, சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகள் திருவோ லக்கங் கொண்டுள்ளனர் இந்த மூர்த்திகளுக்கு நித்திய தீபம் ஏற்றப்பட்டபடி இரண்டு பாவை விளக்குகள் வசந்த மண்டபத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.

இவ்வாலயத்தின் வரலாற்றுக்குரியதும் ஐயனார் கேணியிலிருந்து கொண்டு வரப்பட்டது மாகிய விநாயகப் பெருமானும் ஒரு சிவலிங்கமும் இம்மண்டபத்தினுள் வைத்துப் பூஜிக்கப்பட்டு வருகின்றது. தரிசன மண்டபத்தில் மூஷிகமும், பலிபீடமும் இருக்கின்றது. இம்மண்டபத்தின் வட கிழக்குத் திசையில் பைரவரும், நாகதம்பிரான் சிலைகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது.

தரிசன மண்டபத்தின் தென்மேற்குத் திசையில் 1984ஆம் ஆண்டு ஸ்ரீ நாராயணமூர்த்தி பிரதிஷ்டைசெய்யப்பட்டு கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. ஆதி சேடன்மீது ஆனந்த சய னங் கொண்டிருக்கும் நாராயணப் பெருமானுடைய உந்திக் கமலத்தின்மீது பிரம்மா எழுந்தருளி யிருக்கிறார். பூதேவி, ஸ்ரீதேவி இருவரும் நாராயணருக்கருகே இருக்கின்றார்கள். ஆஞ்சனேய ராகிய சிறிய திருவடியும் நாராயணருடைய திருவடிக்கருகே மண்டியிட்டு வணங்கியபடி இருக் கிறார். இந்தத் திருவுருவங்களெல்லாம் ஆலய வடிவில் பித்தளையால் அமைக்கப்பட்ட கேடகம் ஒன்றினுள் பீடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இது ஒரு சிறிய சந்நிதிபோல் தோற்ற மளிக்கின்றது. பித்தளையால் செய்யப்பட்ட சங்கு, சக்கரங்களாகிய திருச்சின்னங்கள் சந்நிதியை அலங்கரிக்கின்றன. பஞ்சலோக விக்கிரகங்களுக்குப் பாவை விளக்கு ஒளியூட்டிக் கொண்டிருக் கிறது.

தரிசன மண்டபத்தின் சுவர்களில் கஜமுகன் போர், விநாயக சஷ்டி விரதம், அனந்தன் சாப நீக்கம் முதலிய புராணக் கதைகளை விளக்கும் அழகிய வர்ணச் சுவரோவியங்கள் தீட்டப் பட்டுள்ளன. மகா மண்டப வாசலை பன்னிரண்டடி உயரமும், பத்தடி அகலமுங் கொண்டதும் பித்தளையாற் செய்யப்பட்டதுமாகிய பெரிய அலங்காரத் திருவாசியொன்று ஆலயத்துக்கு அழகு செய்து கொண்டிருக்கிறது. இதே போன்று அர்த்த மண்டபம், கற்பக்கிரக வாசல்களையும், பித் தளையால் செய்யப்பட்ட பெரிய திருவாசிகள் அலங்கரிக்கின்றன. ஆலடி விநாயகருக்கு கற்பக் கிரகத்தில் தீப பூஜை நடைபெறும்போது தெரிசன மண்டபத்திலோ? ஆலய முன்றிலிலோ நின்று தரிசிப்பவர்களுக்கு ஆலயத்தின் உட்பக்கம் முழுவதும் தங்க மூலகம் பூசப்பட்ட கோவில் போலக் காட்சியளிக்கும்.

இவ்வாலயத்தில் திருவனந்தல், காலைச்சந்தி, உச்சிக் காலம், சாயரட்சை ஆகிய நான்கு காலப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. சித்திரா பூரணையைத் தீர்த்த தினமாகக் கொண்டு பத்துநாள் அலங்கார உற்சவமும், மாதசதுர்த்தி, விநாய விரதம், கஜமாகாசூரசம்மாரம், சர்வாலய தீபம், திருவெம்பாவை, ஏகாதசி, தைப்பூசம், முதலியனவும் நைமித்திய பூஜை வழிபாடுகளாக நடைபெற்று வருகின்றன. ஆவணிச் சதுர்த்தியும், சுவர்க்கவாயில் ஏகாதசியும் மிகவும் சிறப்பு வழிபாடுகளாக நடைபெறுகின்றன. மார்கழி மாதம் முழுவதும் திருப்பள்ளியெழுச்சிப் பூசையும், சங்காபிஷேகங்களும் இங்கு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சித்திரா பூரணையன்று ஆலடி விநாயகப் பெருமான் கடற்தீர்த்தமாடச் செல்லுவார்.

கிழக்கு மாகாணத்தில் இவ்வாலயத்தில்தான் முதன்முதல் பஞ்சமுக விநாயகப் பிரதிஷ்டை செய்யப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. ஈசானத் திருமுகத்தை மத்தியில் மேல் நோக்கிய பாவனையில் வைத்து தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோ ஜாதம் ஆகிய நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுகங்களையும் நான்கு திசையையும் நோக்கியிருக்கும்படியாக இந்தப் பஞ்சமுக விநாயகர் அமைக்கப்பட்டுள்ளார். இத்திருவுருவத்துக்கு விநாயக விரதகாலம் இருபத்தொரு நாளும் பஞ்ச முகார்ச்சனை நடைபெற்றுவருகின்றது. இத்திருவுருவம் 1980 ம் ஆண்டு ஆவணிமாதம் 21ந் திகதி பிரதிஷ்டை செய்யப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது.

தற்போது இவ்வாலய தர்மகர்த்தாக்களாகிய சிவஸ்ரீ. சு. கு. முத்துக்குமாரசாமிக்குருக்களும் அவருடைய மைந்தர்களாகிய சிவஸ்ரீ. மு. சுந்தரலிங்க தேசிகரும், சிவஸ்ரீ. மு. சண்முகரெட்ணக் குருக்களும் ஆலயத்தைச் சிறப்பாக நடாத்தி வருகிறார்கள்.

ஆலடி விநாயகர் தேவஸ்தானம் திருக்கோணமலையில் சமய, சமூக, இலக்கியப் பணிகளைச் செய்து மக்களுக்கு நலம்புரியும் சேவையைத் தொடங்கியுள்ளது. புலவர், வை. சோமாஸ்கந்தரும், திரு. ஸ்ரீஸ்கந்தராசா அவர்களும் எழுதிய "திருக்கோணேஸ்வரம்" என்னும் நூல் கிடைப்பதற்கரிதாகிவிட்டதால் 33 வருடங்களின் பின் 27-08-1996 செவ்வாய்க்கிழமை ஆலடி விநாயகர் தேவஸ்தானம் இந்நூலை மறுபதிப்புச் செய்து வெளியீட்டு விழாவை நடத்தியது.

வெளியீட்டு விழா இறைபணிச் செம்மல் திரு. பொ. கந்தையா (காந்தி ஆசிரியர்) தலைமையில் இ. கி. ச. கோணேஸ்வர இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. விசேட அழைப்பின் பேரில் சமுகமளித்த சிறப்பு விருந்தினர் பிரதிஷ்டா பூஷணம், சிவாகம ஞானபானு, பிரதிஷ்டா கலாநிதி சிவாச்சாரிய சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் அவர்கள் சிறப்புரை வழங்கி வாழ்த்தினார். அவரை பொன்னாடைபோர்த்திக் கௌரவித்தனர்.

சுத்தகணித சோதிடர், ஜோதிட சித்தாந்த சேகரம் ஸ்ரீலஸ்ரீ. மு. சுந்தரலிங்க தேசிகர் நூல் வெளியீட்டுரை வழங்கினார். ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தா, வேதாகமமாமணி. சோ. இரவிச்சந்திரக்குருக்கள் ஆசியுரை வழங்கியும், முத்துக்குமாரசுவாமி கோவில் பிரதம குரு வேதாகமமாமணி இ. இராஜ ராஜேஸ்வரக் குருக்கள் வாழ்த்துரை வழங்கியும் நூலை சான்றோர்களுக்கு வழங்கினர். நூலாசிரியருக்கு பொன்னாடை போர்த்தி பொற்கிழி வழங்கியும், வெளியீட்டாளருக்கு பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தனர். நூலாசிரியருக்கும், சிறப்பு விருந்தினருக்கும் வாழ்த்து மடல்கள் வாசித்து அளிக்கப்பட்டது. ஞானசிரோன்மணி, பண்டிதர். ஆர். வடிவேல் அவர்கள் நூலாய்வுரை வழங்கினார். சிவஞானச் செல்வர் செ. சிவபாத சுந்தரம் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

திருக்கோணமலைப் பட்டினத்தில் விநாயகராலயங்கள் பல இருந்தபோதிலும் இவ்வாலயத்தில் எண்ணிய பொருளெல்லாம் எளிதில் முற்றுறச் செய்யும் கண்ணுதலுடைய களிற்றுமாமுகம் பெருமான் சாந்நித்தியமாயிருந்து அடியார்களுக்கு வேண்டியதை ஈந்து அருள் பாலித்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# மகா கணபதி மூலமந்திரம்

**மு. சுந்தரலிங்க தேசிகர்**
"ஜோதிட சைவ சித்தாந்த சேகரம்"
"சுத்த கணித ஜோதிடர்"

ஓம், ச்ரீம், ஹ்ரீம், க்லௌம், கம், கணபதயே வரவரத, ஸர்வ ஜனமே வசமானயஸ் ஸ்வாஹா.

**ஓம்** என்பது மனித உடலைச் சுற்றியுள்ள அகண்ட கோச அ. உ. ம ஆகிய சிருஷ்டி திதி லயம் ஆகிய விந்து நாதத்தைக் குறிக்கும்.

**ச்ரீம்,** இது ஸ் + ர் + ஈ + ம் என்ற எழுத்துக்களைக் கொண்டது. ஸ் - இது மூலாதாரத் திலுள்ள பீஜம். ர் - இது சிவாதிஷ்டானத்திலுள்ள பீஜம். ஈ - இது சோமசூரிய அக்கினி ஆகிய சிரசிலுள்ள ஒளி நிலைகளைக் குறிக்கும்.

**ஹ்ரீம் -** "ஹ - சிவம்," "ஏ - பிரகிருதி" "ஐ - மகாமாயை," "நாதம் - சக்தி" இது மகாமாயை பீஜம் என்று கூறுவர் சகல புவனத்தலைவி அகிலாண்டேஸ்வரியை இந்த ஏகாக்ஷரத்தால் வழிபடு கின்றனர்.

**க்லௌம் -** "க - கணேசர்," "ல - பிருதுவி," "ஔ - தேயஸ்," பிந்து - துர்க்க நிவர்த்தி," "ல - சுவாதிஷ்டானத்தில் உள்ளது," "கம் - இது தொண்டையில் தொழிற்படும் எழுத்து." தொண்டை யில் இருந்து மேல் போகும் போது எழுத்து குண்டலினி மேல்நிலையில் விளங்குவதாகும்.

**கணபதி** - தும்பிக்கையுடைய விநாயகரைக் குறிக்கும். "க - ஞான நெறியில் போதல்," "ண - மோட்சம்," "பதி - பரம்பொருள்".

**வரவரத** - விரும்பியவற்றை அளிப்பவர்.

**சர்வஜனமே வசமாயஸ் ஸ்வாகா** - விநாயகரை காணாபத்தியத்தில் பிரஜாபதி என்று ஐதரேயத்தில் கூறப்பட்டுள்ளது பற்றி அவர் ஆட்சியிலுள்ள ஆன்மாக்களது தேக தத்துவத்தைக் குறிக்கும்.

**வசமானாயஸ் ஸ்வாகா** - தேக தத்துவங்கள் எல்லாம் ஒரு நிலைப்படுத்தி ஆத்மாவில் கணபதி திருவுரு நிலைபெற்று, ஆத்மா சிறப்புற்று விளங்கவேண்டும் என்பதே இம் மந்திரத்தின் பொருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# விநாயக கவசம்



ஆதியில் இக் கவசத்தை காசிபமுனிவர் முற்கல முனிவருக்கு அருளிச்செய்ய. அவர் மாண்டவிய முனிவருக்கு அநுக்கிரகிக்க. அவர் மாரீசிமுனிவருக்கு உபதேசித்தருள. அவர் பல முனிவர்களுக்குத் திருவாய்மலர்ந்தருளிச் செய்தன ரென்றறிக.

நித்திய கருமங்களை முடித்துப் பரிசுத்தமாகிய ஓரிடத்தில் இருந்து கொண்டு. ஒன்று பட்ட மனத்துடனே விநாயகரைத் தியானித்து. இதைச்செபிக்க வேண்டும்.

*வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா*
*யகர்காக்க வாய்ந்த சென்னி*
*யளவுபடா வதிகசவுந் தரதேக*
*மதோற்கடர்தா மமர்ந்து காக்க*
*விளரறநெற் றியையென்றும் விளங்கியகா*
*சிபர்காக்கப் புருவந் தம்மைத்*
*தளர்வின்மகோ தரர்காக்க தடவிழிகள்*
*பாலசந் திரனார் காக்க* (1)

*கவின்வளரு மதரங்கச முகர்காக்க*
*தாலங்கணக் கிரீடர் காக்க*
*நவில்சிபுகங் கிரிசைசுதர் காக்கநனி*
*வாக்கைவிநா யகர்தாங் காக்க*
*அவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்செஞ்*
*செவிபாச பாணி காக்க*
*தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா*
*சியைச்சிந்தி தார்த்தர் காக்க* (2)

*காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி*
*காக்ககளங் கணேசர் காக்க*
*வாமமுறு மிருதோளும் வயங்குகந்த*
*பூர்வசர்தா மகிழ்ந்து காக்க*
*ஏமமுறு மணிமுலைவிக் கினவினா*
*சன்காக்க விதயந் தன்னைத்*
*தோமகலுங் கணநாதர் காக்கவகட்*
*டினைத்துலங்கே ரம்பர் காக்க.* (3)

*பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க*
*பிருட்டத்தைப் பாவ நீக்கும்*
*விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்*
*வியாளபூ டணர்தாங் காக்க*
*தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்*
*காக்கசக னத்தை யல்லல்*
*உக்ககண பன்காக்க வூருவைமங்*
*களமூர்த்தி யுவந்து காக்க* (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்முழந்தாண் மகாபுத்தி காக்கவிரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் யாசாபூ ரகர்காக்க
விரல்பத்தும் வர்த்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர்காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க. (5)

அக்கினியிற் சித்தீசர் காக்கவும்
புத்திரர்தென் னாசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனமேற் கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகழு தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கி
லீசநந் தனரே காக்க. (6)

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கவிராக்
கதர்பூத முறுவே தாள
மோகினிபே யிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க. (7)

மதிஞானந் தவந்தான மானமொளி
புகழ்குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிரக
மனைவிமைந்தர் பயினட் பாதிக்
சதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க. (8)

வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடினும்பா லிடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதி னாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும். (9)

**விநாயகர் கவசம் முற்றிற்று**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# திருக்கோணமலை ஆலடி விநாயகர் ஆலய
# மகா கும்பாபிஷேகம்

**தமிழ்மணி பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கன்**

திருக்கோணமலை அருள்மிகு ஸ்ரீ ஆலடி விநாயகர் தேவஸ்தானம் மிகவும் பிரபல்யம் வாய்ந்த ஆலயமாகும். திருக்கோணமலையின் மத்தியகேந்திர ஸ்தானமான பெரிய முற்றவெளியின் எதிரே ஆலடி விநாயகர் ஆலயமும், அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயமும் அருகருகே பன்னெடுங்காலமாக அமர்ந்திருப்பதும் பல மதத்தவரும் இங்கு வழிபட வருவதும் இது காலவரை எந்தவித வன்செயல்களாலும் பாதிக்கப்படாமல் இருப்பதும் இவ்விரு ஆலயங்களுக்குமுள்ள சிறப்பம்சமாகும். அத்தோடு வரலாற்றுப் புகழ்மிக்க திருக்கோணேஸ்வரப்பெருமானை விநாயகர் ஆலய முன்றலில் நின்றபடி கோபுரதரிசனம் செய்ய முடிவதும் ஒரு சிறப்பு.

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் இவ்வாலயமுன்றலில் ஒரு பெரிய ஆலமரம் நின்ற படியால் இவ்வாலயம் ஆலடி விநாயகர் என்றழைக்கப்பட்டது. இவ்வாலயம் நூற்றாண்டு காலப் பழமை மிக்கது. நூறு ஆண்டுகளுக்கு முன் இவ்வாலயத்தின் அருகேயுள்ள ஐயனார்கேணி என்ற நீர்த்தேக்கத்தில் இருந்து இவ்விநாயகர் சிலை கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. தற்போது இக்கேணி தூர்ந்து விட்டதாயினும் இவ்விடம் ஐயனார் கேணிக்குடியிருப்பு என்றே அழைக்கப் படுகிறது.

தற்போது இவ்வாலயம் அமைந்துள்ள இடத்தில் ஒரு மடாலயம் அமைத்து இவ்விநாயகரைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தவர் சின்னையாக்குருக்கள் என்று அறியப்படுகிறது. இவருக்குப்பின் இவரது சந்ததியினரில் ஒருவரான வேதாரணியத்தைச் சேர்ந்த வேதநாயகக் குருக்களின் மகனான சுப்பையாக்குருக்கள் என்பவர் 1905ம் ஆண்டு இவ்வாலயப் பொறுப்பை ஏற்று நடாத்தி வந்தார். தற்போது அவரின் குமாரர்களுள் ஒருவரான முத்துக்குமார சுவாமிக்குருக்களும் அவரது மக்களும் இவ்வாலயப் பொறுப்பை ஏற்றுச் சிறப்பாக நடாத்தி வருகின்றனர்.

மடாலயமாக இருந்த இவ்வாலயம் திரு சுப்பையாக்குருக்களின் முயற்சியால் பெரிதாக்கப் பட்டு மகா கும்பாபிஷேகமும் நடாத்தப்பட்டது. இவ்வாலயத்தின் உட் பக்கச் சுவர்கள் யாவும் வர்ணத் தெய்வீகச் சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

1980ல் இவ்வாலயத்தில் பஞ்சமுக விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டபோது ஒரு கும்பாபிஷேக மலரும் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவ்வாலய வரலாற்றில் இன்னுமோர் சிறப்பம்சமாக 1984ல் பூலட்சுமி, மகா லட்சுமி சமேதப் பெருமானாக விஷ்ணு பள்ளிகொள்ள அந்தநாபிக்கமலத்தில் பிரமன் எழுந்தருளியிருக்கும் தெய்வீகச் சிலை பிரதிஷ்டை பண்ணப்பட்டிருப்பதையும் காணமுடியும்.

இவ்வளவு சிறப்புப் பெற்ற இவ்வாலயத்தின் மகா கும்பாபிஷேகம் 24-10-1996ல் வேதாகம மாமணி பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள் தலைமையில் பிரதமகுரு பிரதிஷ்ட சிரோன்மணி சிவாச்சாரிய துரந்தரர், கிரியா கிரம ஜோதி பிரம்மஸ்ரீ. சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களால் ஆதீனதர்மகர்த்தா அகில இலங்கை சைவக் குருமார் பீடாதிபதி சு. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் ஆகியோரால் நடைபெற உள்ளது.

1977ல் ஆண்டு இவ்வாலய பூங்காவனக்குழு ஒரு சிறப்பு மலரை வெளியிட்டது. அப்போது கும்பாபிஷேக வரவு ரூபா 5839-66 உம் செலவு ரூபா 4029-66 உம் என அறியும்போது திகைப்பாக உள்ளது. இம்முறையும் கும்பாபிஷேக மலர் ஒன்று வெளியிடப்படவுள்ளது. மலர் அச்சடிக்கவே நாற்பதாயிரம் தேவைப்படும் என நினைக்கிறேன்.

இந்த இருபது வருடகால எல்லைக்குள் விஷம்போல் ஏறியுள்ள பணவீக்கத்தைப் பார்க்கும் போது அடியார்களாகிய நாமும் எமது சிறு பங்களிப்பை இவ்வாலயத்துக்கு அளித்து விநாயகரின் அருளைப் பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# ஆலடி விநாயகர் பெருமை

ஆலடி விநாயகர் தேவஸ்தான
நித்திய, நைமித்திக, காமிக அர்ச்சகர்,
"ஆதீன தர்மபீட இளவரசர்"
**மு. சண்முகரெத்தினக்குருக்கள்**

சைவ மக்களால் வழிபடும் கடவுளுள் முழுமுதற் கடவுளாக விளங்குவது பரமசிவம். அப்பரம்பொருளை அன்புடன் வழிபடுவோர் "சைவர்" எனப்படுவர். சிவத்துடன் சம்பந்தம் உடையது சைவம். அத்தகைய சைவம் சார்ந்த சிவனையே முதலாகக் கொள்ளும் சைவர்கள் அவரது அம்சமாக விநாயகர், முருகர் முதலிய வேறு சில மூர்த்திகளையும் வழிபடுவர். அவ்வாறு வழிபடப்பெறும் மூர்த்திகளுள் சண்மதத்தவர்களும் வழிபடப் பெறும் மூர்த்தி விநாயகரே ஆகும். தன்னை உள்ளன்போடு வழிபடும் அடியார்களின் இடர்களை நீக்குபவன் விநாயகன். தம்மை வழிபடாமல் தொடங்கும் காரியங்களிற்கு இடையூறு செய்பவனும் விநாயகனே. இவ்வரத்தை அளித்தவர் தந்தையாகிய சிவபெருமான். இதன் பெருமையை கந்தபுராணம் கஜமுகன் உற்பத்திப் படலம் பின்வருமாறு கூறுகிறது.

"என்னரே ஆயினும் யாவதொன் றெண்ணுதல்
முன்னரே உனதுதாள் முடிவுறப் பணிவரேல்
அன்னர்தம் சிந்தைபோல் ஆக்குதி அவதுணை
உன்னலார் செய்கையே ஊறுசெய் திடுதி நீ"

திரிபுர தகனத்திற்காக தந்தையாகிய சிவபெருமான் விநாயகரை வழிபடாது தேரில் ஏறிச் சென்றபோது விநாயகப் பெருமான் அத்தேரின் அச்சை உடைத்தெறிந்தார்.

இதனை அருணகிரிநாதர் திருப்புகழில் "அச்சிவன் உறைதரு அச்சது பொடி செய்த அதிதீரா" என கூறுகிறார்.

நம்பிறவிக்குக் காரணம் வினைகள். வினைகளை வேரோடு அறுப்பவர் விநாயகர். இதனைக் கபில தேவ நாயனார் "விநாயனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்" என்று கூறியுள்ளார்.

"பிடியத னுருவுமை கொளம [illegible]யது
வடிகொடு தனதடி வழிபடும் அ[illegible]
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே"

நாயன்மார்கள் தாம்பாடிய தேவாரங்களில் சிவனையன்றிப் பிறிதெய்வத்தை பாடியதில்லை ஆனால் முருகனைப் பற்றி இரண்டொரு பாடல்களில் கூறப்பட்டுள்ளது. ஆனால் விநாயகப் பெருமானின் தோற்றம், உற்பத்தி, வரலாறுபற்றி "திருவலிவலம்"தலத்திருப்பதிகமூலம் நன்கு தெளிவாகின்றது. இதற்கு மேலே குறிப்பிட்ட தேவாரப் பதிகமே சான்றாகும்.

இத்தகைய பெருமை வாய்ந்த விநாயகர் திருக்கோணமலையில், ஆலடி விநாயகர் எனும் நாமத்துடன் பிரசித்தி பெற்ற கணேச பீடத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார். இவ்விநாயகருக்கு முப்போதும் திருமேனி தீண்டி பூசனை செய்வதில் பெருமகிழ்வடைகின்றேன். பெருமகிழ்வடைவதோடு ஆத்ம திருப்தியையும் அடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகர் அடியார்கள் பிரசவ காலம் என்றால் விநாயகருக்கு தலையளவு மோதகம் என நேர்கடன் வைப்பர். பிரசவம் முடிந்தவுடன் அந்நேர்கடன் நிறைவேற்றி பொங்கல், அர்ச்சனை செய்வர்.

வித்தியாரம்பம், திருமணம், கிருகாரம்பம், கிருகப்பிரவேசம், பிரயாணம் போன்ற கருமங்களைச் செய்யும் போது கற்கண்டு மோதகப் பூஜை விநாயகருக்கு படைத்து காரியங்களைத் தொடங்குவர்.

இன்னும் பலர் தீராத நோய்கள் தீரவும், தமது உள்ளக்குறைகளை நீக்கவும் விநாயகப் பெருமானிடம் முறையிட்டு நேர்கடன் வைப்பர். விநாயகப் பெருமான் இவர்களிற்கு அநுக்கிரகம் அளித்தவுடன் என்னுடன் நேரில் வந்து பல அடியார்கள் "எல்லாம் விநாயகப் பெருமான் திருவருளால் சித்தியாகியது" எனக் கூறும்போது விநாயகப் பெருமான் திருவருளை எண்ணி பெருமையடைவேன்.

ஆலடி விநாயகரை வழிபடுவோருக்கு இக்கும்பாபிஷேக நன்நாளில் சகல சிறப்புக்களும் உண்டாக அவனடி வணங்கி வாழ்த்துகின்றேன்.

## அபிஷேக திரவ்யங்களின் வரிசையும் அளவும் பலனும்

| திரவ்யம் | பலன் |
|---|---|
| வாசனைத்தைலம் | சுகமளிக்கும் |
| மாப்பொடி | கடனைத் தீர்க்கும் |
| நெல்லிமுள்ளி | அரசன் வசம் |
| மஞ்சள் பொடி | ரோகத்தைப் போக்கும் |
| ஜலதிரவியம் | |
| பஞ்சகவ்யம் | பாபத்தைப் போக்கும் |
| பஞ்சாமிர்தம் | புஷ்டி அளிக்கும் |
| பசுவின் நெய் | மோக்ஷமளிக்கும் |
| பசுவின் பால் | ஆயுளைக் கொடுக்கும் |
| பசுவின் தயிர் | பிரஜாவிருத்தி உண்டாகும் |
| தேன் | சுகமளிக்கும் |
| கரும்பின் சாறு | ஆரோக்கியமளிக்கும் |
| சர்க்கரை | |
| பழவர்க்கம், வாழைப்பழம் | பயிரை வளர்க்கும் |
| மாம்பழம் | வச்யம் |
| மாதுளை | கோபத்தைப் போக்கும் |
| பலாப்பழம் | புஷ்டியளிக்கும் |
| எலுமிச்சம்பழம் | |
| இளநீர் | போகமளிக்கும் |
| அன்னாபிஷேகம் | சாம்ராஜ்யமளிக்கும் |
| சந்தனம் | லக்ஷ்மியைக் கொடுக்கும் |
| கும்பம் | மோக்ஷப்ரதம் |
| பத்ராம்பு | உலகவசம் |
| தாராம்பு | இன்பளிக்கும் |
| சிருங்கதோயம் | தைரியத்தை அளிக்கும் |
| ரத்னோதகம் | லக்ஷ்மீப்ரதம் |
| குசோதகம் | தூய்மையளிக்கும் |
| அர்க்யோதகம் | ஞானமளிக்கும் |
| சங்கோதகம் | புண்யப்ரதம் |
| தீப எண்ணெய் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# ஆலய சிற்பக்கலை

சிற்பக் கலைஞர், சிற்பசாகரம்
**கந்ததாஸ் ரவீந்திரதாஸ்.**

எல்லாம் வல்ல பரம்பொருளை பல உருவங்களில் நினைந்து ஆகமசிற்ப சாஸ்திரங்களிற் கமைய அழகுற அமைத்து வர்ண வேலைகள் செய்வது சிற்பக்கலை ஆகும். இது ஒரு தெய்வீகக் கலையாகும். இக்கலையின் வளர்ச்சி தற்காலத்தில் குன்றி வருகிறது. அனேகமான ஆலயங்கள் பல இலட்சக்கணக்கான செலவு செய்தும் சிற்பசாஸ்திர முறைப்படி அமைவதில்லை. சிற்பசாஸ் திரம் இறைவனால் மயன் என்னும் சிற்பிக்கு வழங்கப்பட்டதாகும். இக்கலையின் தத்துவ உணர் வை உணராமல் கட்டுவதனால் பலனைப் பெற முடியாது. எம் நாட்டைப் பொறுத்த வரை இக் கலையை வளர்ப்பதற்கு சிற்பக்கல்லூரிகள் இல்லை. கற்றறிந்தவர்கள் மற்றவர்களிற்கு எடுத்துரைப் பதில்லை இந்தியாவில் மாமல்லபுரம் சிற்பக்கூடம் சிறப்பம்சமாக விளங்குகின்றது. ஆலய அமைப்புக்கள், ஊனுடம்பு ஆலயம் எனும் திருமூலர் வாக்கிற்கமைய அமைக்க வேண்டும். முறைதவறிச் செய்யின் இடி விழுந்த மரம் போல தடியும் பாழாம் என்று காக்கையர் சிற்பம் கூறுகிறது. திருப்பணிகளைச் செய்யும் தர்மகர்த்தாக்களும், சிற்பாரியர்களும் பொருள்வழி நில்லாமல் அருள் வழிநின்று செய்தல் வேண்டும். ஆலயங்களை அமைப்பதற்கு சிற்பாசாரியார் கள் முதலில் மூர்த்தி, இடம். பொருள் என்பவற்றை மனதிற் கொண்டு திருப்பணிகளைச் செய்ய வேண்டும். மூர்த்திகளின் அளவிற்கேற்ப கர்ப்பக்கிருகம் அமைக்க வேண்டும் கர்ப்பக்கிருகத்தின் கால்பிரபாவிற்கு ஏற்றபடி தலையாகவும் அர்த்தமண்டபம் கழுத்தாகவும், மகாமண்டபம் மார்பாக வும், நிருத்தமண்டபம் வயிறாகவும் ஸ்தம்பமண்டபம் கால்களாகவும், இராஜகோபுரம் பாதமாக வும் அமைகிறது. தொப்புள்கொடி ஸ்தம்பமாக அமையும் ஒரு மனிதனுக்கு அங்கலட்சணம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு ஆலய சிற்பஅமைப்பும் முக்கியமாகும்.

ஆலயக் கட்டிட வேலைகள் பின்வருமாறு அமையும்: உத்திரமட்டவேலை, இரட்டைப் பஞ்சாங்க வேலை, முகமத்திரவேலை, ஆகும்.

விமானங்கள் மூன்று வகையாக அமையும்.

அவையாவன

ஏகதளவிமானம், தூபிதள விமானம், திரிதள விமானம் என்பனவாக அமையும்.

இவ்வாறு தத்துவமிக்க ஆலயங்களை அமைத்து வழிபடுவதனால், ஆன்மாக்கள் முத்திப் பேறடைவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் பரத்துவம்

"பிரதிஷ்டா பூஷணம் சிவாகமஞானபானு"
பிரதிஷ்டா கலாநிதி
**சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்**
(ஆதீன குரு ஸ்ரீ நாகபூஷனி அம்பாள் தேவஸ்தானம் - நயினை)

"வாகீ ஸாத்யாஸ் ஸுமநஸஸ் ஸர்வார்த்தாநாம் உபக்ரமே
யம் நத்வா கீருதக்ருத் யாஸ்யுதம் நமாமி கஜாநநம்"

பிரம்மாதி தேவர்கள் கூட எந்தக் காரியத்தின் ஆரம்பத்திலும் எவரை நமஸ்கரித்து எடுத்து காரியத்தை முடித்தவர்களாகிறார்களோ அந்த கஜானரை நானும் நமஸ்காரம் பண்ணுகிறேன். (வாகீஸாத்ய ஸுமனஸ - ஸுமனஸ என்றால் தேவர். வாகீசர் முதலான தேவர்கள். என்று அர்த்தம்)

ஒரு மஹா க்ஷேத்ரமிருந்தால் அதைச் சுற்றி ஐந்து குரோசத்திற்கு தெய்வீகசக்தி பரவியிருக்கும். ஒரு குரோசம் என்றால் இரண்டு அல்லது இரண்டேகால் மைல்கள் இருக்கும். ஒரு க்ஷேத்திரத்தின் தெய்வீக சக்தி பன்னிரண்டு மைல் தூரத்திற்குட்பட்ட பகுதிக்கு சுற்றிப் பரவியிருக்கும். இதனைப் பஞ்ச குரோச எல்லை என்பர். இத்தகு அருள் பெருகு சிவபுண்ய ஸ்தலம் திருக்கோணேஸ்வரம் ஆகும். இஃது கைலாச பர்வதத்தின் ஒன்று என்பது புராண வரலாறு. இறைவன் கல்லால விருட்ஷத்தின் கீழ் தென்முகக் கடவுளாக வீற்றிருந்து நால்வருக்கு மோன நிலையில் இருந்தபடி ஞானோபதேசம் செய்தார். இதே வரலாற்றைத் திருக்கோணமலையிலும் காண்கிறோம்.

திருக்கோணமலை ஆலடி விநாயகர் மூர்த்தி, தல, தீர்த்தம் ஆகியவை ஒருங்கேயமைந்த பெருமை உடையது. கைலாசத்தில் கல்லால விருக்ஷம். இங்கே பசுமையான ஆல விருக்ஷம். "சித்ரம் வடதாரோர் மூலே" என்பதற்கு அமைய ஞானகாரனாகக் கணபதி அமர்ந்துள்ளார். திருநாவுக்கரசு சுவாமிகள் கோயில் வகைகளை கரக்கோயில், ஞாழற் கோயில், கொகுடிக் கோயில், இளங் கோயில், மணிக் கோயில், ஆலக் கோயில் எனப் பலவாறாக பகுத்து அருளினார். இக் கோயில் ஸ்தல தரு கல்லாலான மரம் ஆலக் கோயில் எனப் பெயர் பெற்றது. "கல்லால நிழற்கீழ் அறங்கள் உரைத்த அம்மானே" என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரம். "திருக்கச்சூர் வடபால் ஆலக் கோயில் அம்மானே" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் பாடிப் பரவியுள்ளார். காசி க்ஷேத்திரத்தில் அக்ஷய வடம் பஞ்சவடி (5 ஆலமரம்) என்று கூறப்பட்டதன் மூலம் ஆலமரத்தின் பெருமையை அறியலாம். மேலும் "ஆல் போல் தழைத்து" என்று கூறி வாழ்த்துவது ஆலமரத்தின் பரந்து வளரும் தன்மை போன்றும், ஆலின் கிளைகளிலிருந்து தொங்கும் விழுதுகளிலிருந்து புதிய மரங்கள் தோன்றுவதும் ஆல விருக்ஷத்திற்கு உரிய தனிச்சிறப்பாகும். ஆல் இலையில் கிருஷ்ண பகவான் பள்ளி கொண்டதாகவும் கூறுவதுண்டு. இத்தகு பெருமை கொண்ட ஆல விருக்ஷத்தை தல விருக்ஷமாகக் கொண்டு விநாயகப் பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கும் இடமே ஆலடிப் பிள்ளையார் கோயில் ஆகும். "பாபநாசம்" தீர்த்தம் அண்மையில் அமைந்த பெருமையும் ஆலடி விநாயகருக்கு உண்டு.

தனக்கு மேலான எவரும் இல்லாது தானே தனி முதல்வனாக விளங்குபவர் விநாயகப் பெருமான். எந்த வேலையையும் நாம் ஆரம்பிக்கும் போதும், அவ்வேலை இடையூறு இன்றி நடைபெற விநாயகப் பெருமான் அருள் வேண்டி நிற்பது நமது வழக்கமாகும். விக்னங்கள் நீக்கும் கடவுளாக வழிபடப்படுகிறார் விக்னேஸ்வரர். விநாயகர், பிள்ளையார் கணபதி, கஜமுகன் பிரணவமூர்த்தி, என்றும் இன்னும் பல்வேறு நாமங்களாலும் அழைக்கப்படுகிறார். விநாயகப் பெருமானது சிறப்பு, அருமை, பெருமை அளவிடற்கரியது. விநாயகப் பெருமானுடைய பெருமைகளை அதர்வ வேதத்தின் கணபதி உபநிஷதத்தில் இருந்து சிலவற்றைத் தெரிவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் பத்ரம் கர்ணேபி : ச்ருணு யாமதேவா"

தேவர்கள் கணபதிக்கு மங்களத்தை கூறும்போது நாம் அதைக் கேட்போமாக. செய்யும் யாகங்கள் குறைவின்றி தடையின்றி நிறைவேறவும் திடமான அங்கங்கள் கொண்ட சரீரத்தால் நாம் சந்தோஷம் பெறவும், இந்திரன் மங்களாசி தரவும், உலகில் வேதங்கள் எமக்கு புஷ்டியைத் தரவும், தொல்லைகள் தரும் எதிரிகளால் வரும் அரிஷ்டங்கள் யாவும் இல்லாது மங்களம் உண்டாகவும், தேவர்களுக்கும் பிராமணருக்கும் குருவான பிரகஸ்பதி எமக்கு மங்களத்தைக் கொடுக்கட்டும்.

"அவத்வம் மாம்................................சமந்தாத்"

நேர்மை, சத்யம் இவற்றுடன் பேசுபவனும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷமென்னும் ப்ரம்ம பாவத்தையும் யாசிக்கும் என்னைப் பல்வேறு இடையூறுகளின் தாக்குதலின்றும் காப்பீராக

"அவோத் தராத்தாத்" - எல்லாத் திக்குகளின்றும் விக்னங்களைக் காக்க வேண்டும்.

இவ்வாறு நேர்மை, சத்யம் இவற்றுடன் வேண்டுகோள் விடுத்த பிறகு உள்ளத்திலுறைந்து புத்தியை இயங்க வைக்கும், பல்வித சித்திகளையும் நல்கும் ஸ்ரீ கணபதிப் பெருமானை பிரார்த் தித்து பின்வருமாறு கூறப்படுகிறது.

"த்வம் வாங் மயத்வம்..............விஞ்ஞானமய யோசி" வாக்கினால் சொல்லப்படும் நாம ரூப மயமாகவும் (கருணையுடனும்) ஜீவஸ்வரூபம் அற்ற பரமாத்வான சித்ஸ்வரூபர் - சின்மயமா னவர் தஹர வித்தையில் அறியத்தக்க பரம்பொருள் ஹ்ருதயத்தில் வீற்றிருக்கும் விஞ்ஞான மய மானவரான தாங்களே. (நாமம், ரூபம், அகங்காரம் - இவை ஜீவஸ்வரூபம்) இவ்வாறு இதயக் கமலத்தில் விளங்கும் பரப் பிரம்மமாக கணேசரை நிரூபித்து அவ்யாக்ருதமான பரப்பிரம்மமாக ஸ்ரீ கணபதியை நிரூபித்து அதர்வ உபநிஷத் மேலும் கூறுகிறது.

"ஸர்வம் ஜக திதம் த்வத் திஷ்டதி"

தங்கள் கர்ம வினைக் கேற்ப பலனை அனுபவிக்க அருளும் செயல் புரிவதால் இவ்வுலக மெல்லாம் தங்கள் பரிபாலனத்தில் நிலைபெற்றுள்ளது.

"த்வம் சத் வாரி வாக் பரிமிதாபதானி".........என்பதால் பரா, பச்யந்தீ, மத்யமா, வைகரீ என்ற நான்கு வாக்குகளும் தங்களது சுவாசத்திலிருந்து தர்மா தர்ம சமஞான போதமயமாக உண்டாயின. இவ்வாறெல்லாம் பகவானை மூலாதார கணபதியாக உபநிஷத் காட்டுகிறது.

"த்வம் குணத்ரயாதீத........<br>பூர் புவஸ் வர ஓம்"

தாங்கள் பிரணவ மயமாக இருப்பதால் ஜனங்களின் உடலில் மூலாதாரமாக இருந்து முக்குணங்களான சத்வ ரஜோ, தாமஸ தோஷத்தால் உண்டான பிரகாசம், அஞ்ஞானம் என்பன இல்லாது மூலாதார மயமாக கணபதி இருக்கின்றார். யோகிகள் சாஸ்வத அம்ருத மயமான தங்களை (கணபதியை) தினமும் மூலாதாரத்தில் தியானிக்கின்றனர்.

ஆகமங்களில் கணபதியைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. காரணாகமத்தில் பதினாறு கணபதிகளையும் பஞ்சபக்த விநாயகரையும் அவரது பஞ்சமுக தியானங்களும் பிரதிஷ்டையும் சொல்லப்பட்டுள்ளது. விநாயகபுராணம், விநாயக பரத்துவம் முதலானவற்றில் பிரணவ மூர்த்தி யாகிய விநாயகப் பெருமான் தம்மை வழிபடும் அடியார்களுக்கு காட்சி கொடுத்து திருவருள் செய்யும் வண்ணம் கொண்டருளிய மூர்த்தங்களின் வரலாறும் திருவருட் திறனும் கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாகமங்கள் உபநிஷதங்கள் மட்டுமன்றி இவற்றுக்குப் பின்பும் உலகம் எங்கும் விநாயகர் வழிபாடு, தொடர்ந்து நடைபெறுகிறது.

தேவார முதலிகள், ஔவையார், நக்கீரர், கச்சியப்ப சிவாசாரியார், ஆதிசங்கரர் முதலானோரும் விநாயகர் வழிபாடு செய்து அருள் பெற்றவர்கள் என்பது அவர்கள் பாடியருளிய நூல்கள் மூலம் அறியலாம்.

விநாயகரின் தோற்றம் பற்றி பல வரலாறுகள் கூறப்படுகின்றன. உமாதேவியின் உத்யான வனத்திலிருந்த சித்திர மண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப் பெற்றிருந்தது. சக்தியும் சிவமும் ஏக காலத்தில் பிரணவத்தை நோக்கவே கணபதிப் பெருமான் அவதரித்தார் என்பதும் ஒரு வரலாறு.

இராவணன், அகத்தியர், இராமர் போன்றோர் வரலாறுகளில் விநாயகர் அனுக்கிரகம் செய்தார் என்று அறிகிறோம். இவை யாவும் ஒவ்வொரு யுகங்களில் ஏற்பட்டது. ஒவ்வொரு யுகங்களின் முடிவு தோற்றங்களில் இறைவன் அவ்வவ் யுகங்களில் தோன்றியவையே அன்றி அவற்றுள் பேதமில்லை. ஆனால் விக்னங்கள் நீக்கும் விநாயகருக்கே முதல் வழிபாடு என்பதில் ஒத்த கருத்தே நிலவுகிறது.

"சதுர்த்தி திதி சம்பவாய" என்பதில் விநாயகப் பெருமானின் தோற்றத்தை அறிய முடிகிறது.

வாதுளாகமத்தில் தத்துவ பேதப் படலத்தின் 134ம் ஸ்லோகத்திலே மகேஸ்வரருடைய திருக்கண்டத்தினின்றும் கணேசர் தோன்றினார் என்று கூறப்பட்டிருக்கிறது. கந்தபுராணம், சுப்ர பேதாகாமம் முதலியவற்றில் கஜமுக சம்ஹாரத்தின் பொருட்டு பிரணவத்தினின்றும் தோன்றினார் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இவை இரண்டும் முரண்பாடாகாது என்றும், முதலில் கூறியது பிரதம மகா சிருஷ்டியின் தோற்றத்தையே என்றும்; புராணம் முதலியவற்றில் கூறியது அவாந்தர சிருஷ்டியின் -தோற்றத்தை எனவும் விநாயக பரத்துவம் கூறுகிறது.

ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் உட்பொருளாய் விளங்குபவர் விநாயகப் பெருமான். விநாயகர் என்றால் நமக்கு மேலான தலைவர் இல்லாதவர் என்றும் பொருள்படும். சிவபெருமானின் வாக்கின் வடிவம் விநாயகர். அதாவது ஒலியின் வடிவம். ஒலியே மந்திரமாகும். அதனால் கணபதி மந்திர வடிவானவர். அவருடைய வடிவத்திலேயே பிரணவ மந்திரத்தின் உருவத்தைக் காண்கின்றனர். மண், காற்று, தீ, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களில் இருந்துதான் உலகம் உருப்பெற்றது. இந்த பஞ்ச பூதங்களும் முழுமுதற் கடவுளான கணபதியின் உருவத்தில் அடங்கியிருப்பதாகச் சொல்வார்கள்.

கணபதியின் உருவம் தியானிப்போரை பரவசத்தில் ஆழ்த்தும் அற்புத வடிவமாகும். விநாயகரின் திருமேனி தத்துவம் நிறைந்தது. விநாயகப் பெருமான் யானை முகமும், மூன்று கண்களும், இரு செவிகளும், ஐந்து கரங்களும், பெரிய வயிறும், குறுகிய இரு திருவடிகளும், கொண்ட திரு உருவ அமைப்பினை உடையவர். யானை முகம், விநாயகர் பிரணவ ஸ்வரூபி என்பதை விளக்குகிறது. தத்துவத்தின் உண்மைப் பொருளினை ஆராயும் போது நாதம், விந்து ஆகிய இரு தத்துவங்களின் உரு வெளிப்பாடு விநாயகப் பெருமானது தோற்றமாக காணப்படுகிறது என்று தத்துவ நூல்கள் விளக்குகின்றன. நாத தத்துவம் சிவனையும், விந்து தத்துவம் சக்தியையும் குறிப்பனவாம். நாத விந்துக்கள் சேர்ந்த நிலையிலே "ஓ" என்ற எழுத்து தோன்றியது என்றும், இந்த ஓங்காரத்தின் தோற்றமே விநாயகர் உருவத்தின் தோற்றம் என்னும் தத்துவ விளக்கம் கூறுகிறது. "ஓ" என்னும் எழுத்தும் - விநாயக வடிவமும் ஒன்றாக இருப்பதை அவதானிக்கும் போது இவ்வுண்மை புலனாகும்.

விநாயகரின் திருக்கரங்கள் ஐந்தில் மேலே உள்ள வலக்கரம் அங்குசத்தையும், இடக்கரம் பாசத்தையும், கீழே உள்ள வலக்கரம் ஒடித்த ஒற்றைத் தந்தத்தையும், இடக்கரம் மோதகத்தையும், தாங்கி உள்ளன. பாசம் ஏந்திய கரம் படைத்தலையும், ஒற்றைக் கொம்புள்ள கை காத்தலையும், மோதகம் தாங்கிய இடக்கை அருள் புரிதலையும் குறிக்கின்றன. ஐந்து கரங்களும் பஞ்ச கிருத்தியத்தைச் செய்யும் ஆற்றல் உடையவை என்பதை உணர்த்தி நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகரின் வாகனம் மூஞ்சூறு. மூஞ்சூறு மண்ணைக் குடைந்து செல்லும் பழக்க முடையது. அதைப் போல அறிவைத் தேடி ஆய்பவன் ஞானத்தை பெற முடியுமென்பதை ஞானமூர்த்தியாகிய விநாயகப் பெருமான் உணர்த்தி நிற்கின்றார். தேவர்களைத் துன்புறுத்திய கஜமுகா சூரனை அழிக்க, பரம்பொருளான சக்தியே யானைத் தலையும், தேவ உடலும், பூதக் கால்களும், ஐந்து கரங்களும் கொண்ட விநாயகமூர்த்தியாக அவதரித்தார் என்று புராணங்கள் கூறுகின்றன.

விநாயகக் கடவுளின் இடது பாதம் கிரியா சக்தி எனவும், வலது பாதம் ஞானா சக்தி எனவும் கூறுவர். இந்தப் பாதக்கமலங்களை நாடும் பக்தர்களை துதிக்கையால் தூக்கி அவர் தம் துன்பங்களை அழித்து விடுவார். உலகம் யாவற்றையும் தம்முள் அடக்கியிருப்பதைக் காட்டும் தத்துவத்தை விநாயகரின் பேழை வயிறு உணர்த்துகின்றது.

" ஸ்வஸ் வா நந்த மஹாதேவ
கணேசா ப்ரமண ஸ்பதி
ஆநந்தஸ் யாதிதே வோயம்
ஸ்வாநந்த தேச இதிர்யதே "

இவ்வட மொழி ஸ்லோகம் கணபதி தத்துவத்தைச் சிறப்பாக விளக்குகிறது. ஆநந்தமே ஆத்மாவின் சொரூபம். ஆத்மாவே பிரம்மம். எனவே எல்லா ஜீவராசிகளுக்கும், ஈஸ்வரர்களுக் கும் ஒரே ஆன்ம ஸ்வரூபமாக விளங்குவது கணேச பரப் பிரம்மமே என்பதுதான் இச்சுலோ கத்தின் விளக்கமாகும்.

அதர்வ வேதம் விநாயகரின் தியானத்தை பின்வருமாறு கூறுகிறது.

" ஏக தந்தம் சதுர்ஹஸ்தம் ------ யோதினாம்வர :- " ஸ்ரீ விநாயகப் பெருமான் பாசம், அங்குசம், தந்தம், வரத முத்திரை இவைகளை தன் பக்தர்களை ரக்ஷிப்பதற்காக தரித்திருக் கிறார். மோகத்தைப் போக்க பாசக் கயிறும், தீய வழியில் செல்லாமல் பக்தர்களைக் காக்க அங்குசத்தையும், விரோதிகளை நீக்க தந்தத்தையும், பக்தர்களுக்கு அனுக்கிரகிக்க வரத முத்திரையையும் தாங்குகின்றார் என்று கூறப்படுகிறது. நந்தியை வாகனமாகவும், கொடியா கவும் கொண்ட சிவனைப் போன்று அபேதமான விநாயகரும் மூஷிகத்தை கொடியாகவும், வாகனமாகவும் கொண்டிருக்கிறார்.

ஆதி அந்தம் இல்லா ஓங்கார கணநாதன் முதன் முதலாக ஒலி வடிவை வரி வடிவாக் கிய பெருமையைக் கொண்டவர். ஓம் எனும் பிரணவத்தின் உட்பொருளாய் விளங்குபவர் விநா யகப் பெருமான். 'அ' காரம், 'உ' காரம், 'ம'காரம் என்னும் எழுத்துக்கள் சேர்ந்ததுதான் ஓம் எனும் பிரணவ எழுத்தாகும். 'அ' - சிருஷ்டிக்கிறது 'உ' - ரக்ஷிக்கிறது 'ம' - சம்காரம் செய்கிறது என்று கூறுவர். திருமூலர் 'அ' காரம் உயிர், 'உ'காரம் இறை, 'ம' காரம் பலம் என்று கூறி அருளினார். எதையாவது எழுத ஆரம்பிக்கும் போது பிள்ளையார் சுழி போடுவது வழக்கம். இது 'உ' என்ற எழுத்தாகும். இது எங்களை ரக்ஷிக்கட்டும் என்று விநாயகரை வேண்டிப் போடுவதாகும்.

இவ்வாறு ஓம்காரம் மூர்த்தியாகத் திகழும் விநாயகர் வழிபாட்டை பிரதானமாக கொண்டு அதையே ஓர் மதப்பிரிவாக ஏற்பதே 'காணாபத்யம்' ஆகும். கணபதியையே கண் கண்ட தெய்வ மாக ஏற்று பஞ்ச பூதங்களின் பிறப்பிடமாகவும், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் வடிவமாகவும், அனைவருக்கும் முதற் கடவுளாகவும் கொண்டு வழிபடுவதே காணாபத்யத்தின் சிறப்பாகும். காணாபத்யத்தை மேற் கொண்டவர்கள் கணபதி உபாசனையில் பின்வரும் ஸ்லோகத்தைச் சொல்வார்கள்.

" அவ்யாக்ருத ப்ரும்மனோ குணே சஸ்ய சரீரே நாபிர் பிரும்மா
முகம் விஷ்ணு ; நேத்ரம் ருத்ர ; வாம பார்ச்வம் சக்தி ;
தக்ஷிணம் சூர்ய ; ஆத்மா ஸ்மிதாமய ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதியினுடைய நாபி பிரம்ம ஸ்வரூபன் என்றும், முகம் விஷ்ணு ஸ்வரூபம் என்றும், இடப்பாகம் சக்தி ஸ்வரூபம் என்றும், வலது பாகம் சூரியன் என்றும் கணபதியை உணர்ந்து கொள்வோம் என்பது இதன் பொருளாகும்.

காணாபத்யம், சைவம், கௌமாரம், சாக்தம், வைஷ்ணவம், சௌரம் என்னும் ஆறு மதங்களையும் ஷண் மதங்கள் என்பர். காணாபத்யம் - கணபதியையும், சைவம் - சிவனையும், சாக்தம் - சக்தியையும், கௌமாரம் - முருகனையும், வைஷ்ணவம் - விஷ்ணுவையும், சௌரம் - சூரியனையும் முழுமுதற் கடவுளாக ஏற்று வழிபாடு இயற்றும் மதங்களாகும். ஷண் மதங்களை ஸ்தாபித்த காஞ்சி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் தன்னுடைய வழிகளைப் பின்பற்றும் ஸ்மார்த்தர்கள் சமரச பாவனை பெற்றவர்களாக இருக்க வேண்டும் என நினைத்து பஞ்சாயதன பூஜையை விதித்தார். பஞ்சாயதன பூஜை என்பது பஞ்ச மூர்த்திகளை வழிபடுதலாகும். இங்கே கணபதி, ருத்திரன், தேவி, விஷ்ணு, சூரியன் ஆகிய இந்த வகையில் ஏக காலத்தில் பூஜிக்கப்படுகிறார்கள். இவ்வைந்து மூர்த்திகளில் உபாசிப்பவர் எந்த மூர்த்தியை பிரதானமாக் கருதிப் பூஜிக்கிறாரோ, அவரையே பீடத்தின் நடுநாயகமாக வைப்பார்கள். மற்ற நான்கு மூர்த்திகளையும் நான்கு திசைகளிலும் வைத்து அபிஷேக ஆராதனை செய்வர். பஞ்சாயதன பூஜையில் பிரதானமாக உள்ள மூர்த்தி களை எல்லாம் தம்முள் தாங்கியவர் ஆகிறார் கணபதி.

ஸ்ரீ ஆதி சங்கரரின் ஷண் மதம் பரம்பொருளை ஆறு (06) பிரதான தெய்வமாகக் காட்டுகின்றது. ஆனால் பாரத நாட்டைப் போன்று நமது நாட்டிலே சிவன், சக்தி, விநாயகர், முருகன், விஷ்ணு என்ற வேறுபாடின்றி எல்லாத் தெய்வங்களையும் ஒரு சேர வழிபடுவது வழக்கமாக இருக்கிறது. இருப்பினும் எந்த ஒரு காரியத்தையும் ஆரம்பிக்கும் போதும் விநாயகரை வணங்கி விக்னங்கள் இன்றி அக்காரியம் நிறைவுற வழிபாடு இயற்றப்படுகிறது.

கடவுள் உருவத்தைச் சமைக்க கல், மரம், செம்பு, மண் முதலியவற்றையும் பயன்படுத்தலாம் என்று ஆகமங்கள் கூறுகின்றன. இது போலவே விநாயகரை பூஜையில் மஞ்சளினாலும், கல், செம்பு, பளிங்கு, முத்து, அரைத்த சந்தனம், வெண்ணீறு, சர்க்கரை ஆகியவற்றாலும் அமைத்து வழிபடுவது வழக்கமாக இருந்து வருகிறது. தைப்பொங்கலன்று பசும் சாணியாலும், திருமணம் முதலிய நற்காரியங்களின்போது மஞ்சளாலும், விநாயக சதுர்த்தியன்று புற்று மண்ணாலும் பிள்ளையார் உருவத்தைச் செய்து வழிபடுகிறார்கள். வழிபாட்டின் போது கும்பத்திலும், கூர்ச்சத்திலும், ஹோம அக்னியிலும் விநாயகரை ஆவாகனம் செய்து வழிபடும் முறையும் உண்டு.

## நீசருக்கு ஏன் உதவி செய்யக் கூடாது?

பாம்புக்குப் பால் வார்த்தால் விஷம் விருத்தியாகும். அதுபோல் நீசருக்கு உபகாரம் செய்தால் அபகாரமே சம்பவிக்கும்.

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகாரம் ஆனாற்போல் – பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம்.

-ஔவையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் போற்றி வணங்கும் தெய்வங்கள் யாவும் கணபதியினுள் அடக்கம் என்பதை விளக்கும் வண்ணம் புராண வரலாறுகள் பல வழங்குகின்றன. அவை பல தெய்வங்களும் விநாயகரைப் போற்றியதை எடுத்துக் கூறுகின்றன. கணபதியைச் சகல தேவதைகளும் ஆராதித்து தங்கள் எண்ணங்களை அடைந்துள்ளனர் என்று உபநிடதங்களும் புராணங்களும் கூறுகின்றன.

திரிபுர அசுரர்களை சிவபெருமான் வெற்றி கொண்டது கணபதியின் அருளால்தான் என்பதை ஹேரம்ப உபநிஷதம், கணேச புராணம், ஸ்கந்த புராணம் ஆகிய நூல்கள் கூறுகின்றன. ஹேரம்ப குருவின் திருவருளினால்தான் திரிபுரம் எரிக்கப்பட்டது என்று உபநிஷதத்தில் பரமேஸ்வரன் பார்வதிக்கு கூறுவதாக உரையாடல் அமைந்துள்ளது. ஹேரம்பன் என்பது கணநாதனின் 16 திவ்ய நாமங்களில் ஒன்றாகும்.

அம்பாளும் விக்னேஸ்வரரைத் தோற்றுவித்து அவர் உதவியினாலேயே பண்டாசுரன் எனும் அசுரனுடன் யுத்தம் செய்து வெற்றி பெற்றார் என வல்லப கணபதி மகாத்மியத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்வரலாறு ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம ஸ்துதியிலும்

" காமேஸ்வர முகாலோக கல்பித ஸ்ரீ கணேஸ்வரா "
" மஹா கணேச நிர்பின்ன விக்ன யந்திர ப்ரஹர்ஷிதா "

என்று குறிப்பிடப்படுகிறது.

பண்டகாசுரனுடன் யுத்தம் செய்த போது சக்தி சேனை எனப்படும் தேவ ஸ்த்ரீகளைக் கொண்ட படையுடன் சக்தி சென்றாள். அசுரன் மிகுந்த மந்திர பலம் கொண்டவனாதலால் விக்ன யந்திரம் ஒன்றைப் பண்ணி அதை அம்பாளின் சேனைகள் உள்ள இடத்தில் விழும்படி வீசினான். யந்திரத்தின் சக்தியால் சேனைகள் யாவும் மயங்கி விட்டன. உடனே அன்னை விநாயகரை வேண்டித் துதிக்க விநாயகர் தோன்றி விக்ன யந்திரத்தை அழித்தார் என்று வரலாறு கூறுகிறது.

மேலும் அருணகிரி நாதரின் விக்னேஸ்வர ஸ்துதியில் ஈஸ்வரனின் திரிபுர ஸம்ஹாரம், சுப்பிரமண்யரின் வள்ளித் திருமணம் இரண்டிலும் விநாயகருக்கு உள்ள பங்கைச் சொல்லியிருக்கிறார்.

மஹாவிஷ்ணு ராம, கிருஷ்ண அவதாரங்களின் போது பிள்ளையாருக்கு சாஸ்த்ரோத்தமாக பூஜை பண்ணியிரக்கிறார்.

உலகுக்கெல்லாம் ஒளிதரும் சூரியனும் கணபதியை வணங்கி அருள் பெற்றவரே. தம் ஒளி எக்காலத்தும் குறையாது இருப்பதற்காக சூரியதேவன் கணபதியை தட்சிணத்தில் அர்க்க கணபதி வடிவத்தில் வழிபடுவதாக கூறப்படுகிறது. பிரம்மா தமது சிருஷ்டியின் ஆரம்பத்தில் கணபதியை வழிபடாது அறியாப்பிழை ஒன்றைச் செய்து விட்டார். தன் தவறு புரிந்ததும் மனம் வருந்தி தும்பிக்கையானை வணங்கிய பின் சிருஷ்டியில் சிக்கல் நீங்கப் பெற்றார்.

சைவ உலகம் அறிந்த தலைசிறந்த கணேச பக்தை ஔவையார். ஔவையின் கதை யாவருக்கும் தெரிந்த ஒன்றே. மணப்பருவம் எய்தி மணவறையில் இருந்து விலகி வாழ்க்கையை வேறுதிசையில் செலுத்த கணபதியை தமக்கு வழித்துணையாக அழைத்துக் கொண்டு ஆரம்பம் முதல் இறுதி வரை புனிதத்தொண்டு செய்தவர் ஔவையார். ஔவையாருக்கு அருள்வழி காட்டிச் சென்ற விநாயகர் சேரமான் பெருமாள் நாயனார், சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஆகிய இருவருக்கும் முன்னராகவே தமது துதிக்கையால் தூக்கிக் கைலாசம் கொண்டு சேர்த்தார்.

இவ்வாறாக புராண வரலாறுகள் யாவும் கணபதியின் சிறப்பினையும், பெருமையினையும், முதன்மையினையும் விளக்கி நிற்பதைக் காணலாம்.

தன்னை உள்ளன்புடன் பூஜித்தவர்க்கு நல்வரம் அருளும் விநாயகப் பெருமானை நாமும் தினந்தோறும் வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெறலாம். முக்கியமாக விநாயகரை விஷேட தினங்களில் விஷேட வழிபாடு செய்து வந்தால் இம்மைப் பயன்களை மட்டுமன்றி மறுமைப் பயன்களையும், வீடுபேற்றையும் அடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி மாதத்து சுக்ல பட்சத்து முதற் சுக்கிர வாரம் தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் தவறாது விநாயகரின் அருள் வேண்டி அனுஷ்டிக்கப்படும் விரதம் சுக்கிர வார விரத மாகும். ஆவணி மாதத்து சுக்ல பட்சத்தில் வரும் சதுர்த்தியில் விநாயகரைப் பூஜித்து வழிபடு வது விநாயக சதுர்த்தி விரதமாகும். இவை தவிர கார்த்திகை மாதத்து கிருஷ்ண பட்ச பிரதமை முதல் மார்கழி மாதம் சுக்லபட்ச ஷஷ்டி திதி வரையில் இருபத்தொரு நாள் (21) அனுஷ்டிக்கப் படும் விநாயக ஷஷ்டி விரதமும், மாசி மாதம் தேய்பிறையில் செவ்வாய்க் கிழமையோடு வரும் சதுர்த்தியில் தொடங்கி ஓராண்டு விதிப்படி அனுஷ்டிக்கப்படும் சங்கடஹர கணபதி விரதமும் முக்கியமான விரதங்களாகும்.

சங்கடஹர சதுர்த்தி விரதம் சர்வ மங்களத்தையும் தரவல்லது. எல்லா விக்னங்களையும் விலக்க வல்லது. இந்த சங்கடஹர சதுர்த்தியை விநாயகர் உண்டாக்கினார் என்று கூறப்படுகிறது. சந்திரனை சுக்ல சதுர்த்தியில் பார்க்கக் கூடாது என்று தான் கூறியது அவரின் கருணை உள்ள த்திற்கு கஷ்டமாக இருந்தமையால் அதனைச் சரி செய்வதற்காக கிருஷ்ண பட்ச சதுர்த்தியில் சந்திரனையும் நினைந்து அர்க்கியம் தந்தருள வேண்டுமென்று அருள் புரிந்தார். பூஜை முடிவில் ரோகிணி சமேதரான சந்திரனையும் பூஜை பண்ண வேண்டும் என்றார்.

இவ்விரதத்தை அகஸ்திய முனிவர் அனுஷ்டித்து சமுத்திரத்தை பானம் செய்யும் சக்தி யைப் பெற்றதாகவும், ஸ்ரீ பார்வதி தேவி ஈஸ்வரனை கணவனாக அடைந்ததாகவும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஸ்யமந்தக மணியை ஜாம்பவானிடமிருந்து கைப்பற்றி தனக்கு ஏற்பட்ட அபவாதத் தை நீக்கிக் கொண்டதாகவும், நளனை விட்டுப் பிரிந்த தமயந்தி பின்னர் ஒன்று சேர்ந்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன.

விநாயகர் தோன்றியது சுக்ல சதுர்த்தியில் எனப்படுகின்றது. அதனால் விநாயக சதுர்த்தி விரதமும் சிறப்பான விரதமாக அனுஷ்டிக்கப்படுகிறது. ஒரு சமயம் சந்திரன், பெருந் தொந்தி யுடனும், யானை முகத்துடனும் நடந்து வந்த விநாயகரைப் பார்த்து கேலியாகச் சிரித்தான். இதனால் கோபமடைந்த கணேசர் "அழகால் கர்வமடைந்த உன்னை இன்று முதல் யாரும் கண் ணால் பார்க்க மாட்டார்கள். பார்ப்பவர்களுக்கு வீண் அபவாதம் ஏற்படும்." என்று சாபம் கொடு த்தார். பின் சந்திரன் பிரம்மாவின் உபதேசப்படி சுக்ல சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்து கணே சரைப் பிரார்த்தித்தான். அதனால் சந்தோஷமடைந்த விநாயகர் சாபத்தை சிறிது மாற்றி சுக்ல சதுர்த்தியன்று மட்டும் உன்னைப் பார்த்தால் தோஷம் ஏற்படும். த்விதியை அன்று உன்னைப் பார்த்தால் அந்த தோஷம் ஏற்படாது என்று கூறி அருளினார் என்பதை புராணங்கள் வாயிலாக அறியலாம். இவ்வாறு விநாயக விரதங்கள் மகத்துவம் வாய்ந்து விளங்குகின்றன.

விநாயகர் பூஜைக்கு அருகம்புல், வன்னிப் பத்திரம், மந்தாரைப்பூ, ஆகியவை சிறந்தவை தாழம்பூ, துளசி ஆகியவற்றால் விநாயகரைப் பூஜை செய்யக் கூடாது. இவை தவிர சாதாரண மாக சிவபூஜைக்கு உகந்த எல்லா பத்திர புஷ்பங்களும் விநாயகர் வழிபாட்டிற்கும் ஏற்றவையே.

அருகம்புல் கொடிய உஷ்ணத்தை தணித்து குளிர்ச்சி தரும் சக்தி உள்ளது. அனலா சுரன் என்னும் ஓர் அசுரன் தேவர்கள், முனிவர்கள் முதல் சகல ஜீவராசிகளையும் துன்புறுத்தி வந்தான். தேவர்கள் விஷ்ணுவிடம் முறையிட, விஷ்ணுவும் விநாயகக் கடவுளே இவனை அழிப் பார் என்று கூறினார். தேவர்கள் விநாயகரிடம் சென்று அனலாசுரனையும், எமது துன்பத்தையும் நீக்கி அருள வேண்டும் என்றும் வேண்டினர். விநாயகரும் சிவபெருமான் ஆலகால விடத்தை தமது கண்டத்தில் அடக்கியது போல, அனலாசுரனை தனது திருக்கரத்தில் அடக்கும்படி எடுத்து ஒரு கவளமாய் விழுங்கினார். விநாயகரின் திரு வயிற்றினுள் அனலாசுரன் அடங்குதலும், ஆன்மாக் களின் உதரங்களில் அக்னி பற்றியது போல் வெப்பம் உண்டாகியது. எல்லோரும் துன்புற்று வருந்தினர். அந்நேரம் விநாயகரை முனிவர்கள் யாவரும் அருகம் புல்லினால் தனித்தனியாகப் பூஜித்தனர். இதனால் துன்பம் நீங்கி யாவரும் நன்மை அடைந்தனர். இவ்வாறு விநாயக பரத்து வம் கூறுகிறது. எனவே விநாயகரை அருகம்புல்லினால் அர்ச்சித்து வணங்குவது விஷேடமாகும்.

" யோதுர்வாங்குரோர்யஜதி - சர்வ லபதே "

( அதர்வசீர்ஷ தொடர் )

அறுகம் புல்லினால் ஹோமம் செய்பவன் குபேரனை ஒத்த செல்வந்தனாக ஆகிறான். நெற் பொரி யினால் ஹோமம் செய்பவன் புகழ் மிக்கவனாகின்றான். மேதத்தன்மையும் அடைவான். ஆயிரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதகத்தினால் தான் விரும்பிய பலனை அடைகின்றான். நெய்யினால் நனைக்கப்பட்ட சமித்துக் களால் ஹோமம் செய்பவன் எல்லாவற்றையும் பெறுகின்றான் எனக் கூறப்படுகின்றது. அருகம் புல் போன்று எருக்கும் விநாயகர் பூஜைக்கு உகந்ததாகக் கொள்ளப்படுகிறது.

விநாயகரை வணங்கும் போது

" சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர் புஜம்
பிரசன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்நோப சாந்தயே "

என்ற சுலோகத்தைக் கூறி நெற்றியில் குட்டி தோப்புக்கரணம் போட்டு விநாயகரை வணங்க வேண்டும்.

| | |
|---|---|
| சுக்லாம் பரதர | - வெள்ளைவஸ்திரம் தரித்திருப்பவர் |
| விஷ்ணும் | - நிலா போன்ற நிறமுடையவர் |
| சதுர் புஜம் | - நான்கு கை உடையவர் |
| ப்ரசன்ன வதனம் | - நல்ல மலர்ந்த முகமுள்ளவர் |
| த்யாயேத் | - தியானிக்க வேண்டும் |
| சர்வ விக்நோப சாந்தயே | - எல்லா விக்னங்களும் இடையூறுகளும் நீங்க வேண்டும் |

சுக்லாம், பரதரம், விஷ்ணும், சசிவர்ணம், சதுர்புஜம், பிரசன்ன வதனம் என்னும் ஐந்து பதங்க ளில் ஒவ்வொன்றுக்கும் ஒரு குட்டாக ஐந்து தரம் நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்ள வேண்டும். மூன்று முறை குட்டிக் கும்பிடுவதும் தொன்று தொட்டு நிலவுகிறது.

கணபதியின் சன்னிதியை அடைந்ததும் நாம் நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்கிறோம். தேகத்தை மடக்கித் தோப்புக்கரணம் போடுகிறோம். நமது மூலாதாரத்தில் உள்ளவர் கணபதி யேதான் என்பதை எடுத்துக்காட்டுவதே இந்த இரு வழிபாடுகளிலும் உள்ள முக்கியமான தத்து வமாகும். நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்ளும் போது அங்கே உள்ளடங்கி இருக்கும் அமிர்த கலசத்தை எழுப்பி , அங்கே உள்ள அமிர்தம் தேக முழுவதும் பரவச் செய்வதற்காகவேயாகும். தோப்புக்கரணம் மூலாதாரத்தில் உள்ள சுஷும்னா நாடியைத் தட்டி எழுப்புவதற்காகப் போடப் படுகிறது. அகஸ்திய மகரிஷி காவேரியைக் கமண்டலத்தில் அடைத்து வைத்து இருந்தார். பூவுலகுக்கு பயனளிக்க வேண்டி காக்கை ரூபத்தில் கணபதி சென்று அதைக் கவிழ்த்து விட் டார். காவேரியும் விடுதலை பெற்றாள். அகஸ்தியர் கோபத்தால் அதனை விரட்டிச் செல்ல அது சிறுவனாக மாறி ஓடியது. சிறுவனை துரத்திப் பிடித்து குட்ட எண்ணினார். ஆனால் பின் தான் குட்ட நினைத்தது கணபதியையே என்று ஞான திருஷ்டியால் அறிந்தார். தன் தவறை எண்ணி தன் தலையிலேயே குட்டிக் கொண்டார். இதனால் இவ்வழக்கம் உண்டானதாக புராண வரலாறு கூறுகிறது.

ஒரு சமயம் இராவணன் கைலைக்கு சென்று ஆத்ம லிங்கத்தை வாங்கிக் கொண்டு இலங்கைக்கு திரும்பிக் கொண்டிருந்தான். அந்த லிங்கத்தை இலங்கையில் பிரதிஷ்டை செய்து விட்டால் அவனை வெல்ல யாராலும் முடியாது என்பதை உணர்ந்த தேவர்கள் கணபதியைப் பிரார்த்தித்தனர். மஹாகணபதியும் தேவர்கள் பிரார்த்தனைக்கு இணங்க பிரம்மச்சாரிச் சிறுவன் வடிவம் தாங்கி இராவணன் வரும் வழியில் வந்தார். இராவணன் ஆத்ம லிங்கத்தை வாங்கும் போது இரண்டு நிபந்தனைகளுக்குட்பட்டே பெற்றுக் கொண்டான்.

1. அதைக் கீழே பூமியில் எங்கும் வைக்கக்கூடாது. அப்படி வைத்தால் மீண்டும் அதை எடுக்க முடியாது.
2. சரீர சுத்தியும் அவசியமாதலால் மலசல நிவர்த்தி சமயத்தில் கையில் வைத்துக் கொள்ளக் கூடாது.

இவ்விரு நிபந்தனைகளையும் ஏற்று வந்து கொண்டிருந்த இராவணன் சிறுநீர் கழிக்க எண்ணி எதிரில் வந்து கொண்டிருந்த சிறுவனிடம் லிங்கத்தை ஒப்படைத்துச் சென்றான். ஆனால் விநா யகரும் நிபந்தனை விதித்தார். தான் மூன்று முறை கூப்பிடுவதற்குள் வராவிட்டால் லிங்கத்தை கீழே வைத்து விடுவேன் என்று கூறி வாங்கினார். சிறுவனும் மூன்று முறை கூப்பிட்டு வராது போகவே லிங்கத்தை கீழே வைத்து விட்டான். திரும்பி வந்து பார்த்த இராவணன் ஏமாற்றமும் கோபமும் அதிகரிக்க பையன் தலையில் குட்டினான். விநாயகர் சுயவடிவுடன் காட்சி தரவும் தன் தவறை உணர்ந்த இராவணன் தன் தலையிலே குட்டி விநாயகரை வணங்கினான். விநாய கரை குட்டிக் கும்பிடும் வழக்கம் இவ்வாறுதான் உண்டாகியது என்று புராண இதிகாச வரலாறு கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே விநாயகரை வணங்கும் போது தலையில் குட்டி வணங்கும் வழக்கம் தொன்று தொட்டே இருந்து வந்தது என்பது தெளிவாகிறது.


இரண்டு காதுகளையும் வலது கை இடது காதையும், இடது கை வலது காதையும் மாறிப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தும் எழுந்தும் மும்முறை அல்லது ஐந்து முறை செய்வது தோப்புக்கரணம் எனப்படும். தோப்புக்கர்ணம் என்பது தோர்பிகரணம் என்றாகும். தோர்பி என்பது வடமொழிச்சொல் ஆகும். தோர்பி என்றால் பலகைகள் எனப் பொருள்படும். மஹா விஷ்ணுவின் சக்கரத்தை விநாயகப் பெருமான் விளையாட்டாக வாய்க்குள் வைத்துக் கொண்டார். அதனை மீளப் பெறுவதற்காக விஷ்ணு பகவான் அவரைச் சந்தோஷப்படுத்தி சிரிக்க வைக்க இவ்வாறு தோப்புக்கர்ணம் போட்டார். இதனைப் பார்த்து விநாயகர் சிரிக்க சக்கரம் வாயிலிருந்து விழுந் தது என்று புராணங்கள் கூறுகின்றன. எனவே விநாயகப் பெருமானை சந்தோஷப்படுத்த நாமும் தோப்புக்கர்ணம் போட்டு வணங்கினால் எடுத்த காரியங்கள் விக்னங்கள் இன்றி நிறைவுறும் என்பதில் ஐயமில்லை. மேலும் நற்பலன்களை அடையலாம்.

கணபதி பிரம்மசாரி என்பதை யாவரும் அறிவர். அவர் வல்லபையோடு இருப்பதாக ஆகமங்கள் கூறுகின்றன. யாகங்கள், ஸ்நபனம் முதலானவற்றில் வல்லபையை வைத்து பூஜிப் பது ஆகம மரபாகும். சித்தி, புத்தி என இரு சக்திகள் இருப்பதாக புராணங்கள் விளம்பு கின்றன.

சிவன் அபிஷேகப் பிரியர், விஷ்ணு அலங்காரப் பிரியர் என்று கூறுவர். இதே போன்று விநாயகரும் நைவேத்யப் பிரியராவார். குழந்தை சுவாமியான பிள்ளையாருக்கு குறைவில் லாமல் கொழுக்கட்டை, அப்பம், மோதகம், பொங்கல், தேங்காய், பழவகை யாவும் நைவேத்யம் பண்ணி வழிபடுவது மிகவும் சிறப்பானதாகும். ஔவையார் கூட விநாயகரை துதிக்க ஆரம்பிக் கும் போது " பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும் " என்று ஆரம்பிக்கிறார். இவற்றைத் தரு கிறேன் நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா என்று கேட்டுப் பெறுகிறார். இது போன்று திருப் புகழிலும் அருணகிரிநாத சுவாமிகள் " கைத்தலம் நிறை கனி அப்பமொடு அவல் பொரி " என்று பாடியுள்ளார். இதிலிருந்து விநாயகர் நைவேத்யப் பிரியர் என்று அறிய முடிகிறது.

இவ்விதம் அருமை, பெருமை, சிறப்புக்களைத் தாங்கி நிற்கும் விநாயகப் பெருமான் அகரமென அறிவாகி உலகமெங்கும் அமர்ந்திருக்கின்றார். நமது நாட்டிலும் பாரத நாட்டிலும் மட்டுமின்றி சீனா, பர்மா, ஜாவா, திபெத், இந்தோனேஷியா, எகிப்து போன்ற நாடுகளிலும் தமிழர் கள் வாழும் எல்லா நாடுகளிலும் விநாயகர் வழிபாடு தொன்மை வாய்ந்து நிகழ்ந்தது என்றும் அங்கு சின்னங்கள் காணப்படுவதாகவும் வரலாற்று நூலோர் கூறியிருக்கிறார்கள். இன்னும் அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியாவிலும் விநாயக ஆலயங்கள் எழுந்துள்ளன.

கணேசனே முழு முதற் கடவுளாக எல்லாத் தெய்வ பூஜைகளிலும் விளங்குகிறார். கணங்களுக்கெல்லாம் நாயகனான அவரது துணையையே நற்காரியங்கள் எதனையும் ஆரம் பிக்கும் போதும் நாடுகிறோம். ருக் வேதத்தில் கூட " கணாநாந்துவா " என்னும் வேத வாக்கி யம் உள்ளது. இது கணங்களுக்குத் தலைவர் கணபதி என்பதே பொருளாம். இவர் ப்ரம்ம ணஸ்பதி என்றும் ஜேஷ்டராஜன் என்றும் அறிகிறோம். சுவாமி ஊர்வலங்களிலும் முதலில் இடம் பெறும் நாயகர் அவரே. ஆற்றங்கரையானாலும், குளக்கரையானாலும், வீதியானாலும், அரச மரமானாலும் கூரை இல்லாமல் எழுந்தருளி அருள் பாலிக்கும் பெருமை விநாயகப் பெருமானுக்கு உண்டு. இவ்விதம் பெருமை மிகு விநாயகர் திருக்கோணமலையில் ஆலடியில் அருளாட்ஷி செய்கின்றார். விக்னங்கள் தீர்க்கும் விநாயகப் பெருமான் அருள் வேண்டி அனை வரும் நலம் யாவும் பெற்று நன்மை பெருக விநாயகப் பெருமான் பாத கமலங்களை வணங்கி பிரார்த்திப்போமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# விநாயகர் புராணம்

★ எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துளி ருத்துவாம்

-பெரியபுராணம்

★ திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயக
னகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

-கந்தபுராணம்

★ உச்சியின் மகுட மின்ன வொளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள்கிம் புரிவ யங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகடசக்ர கணபதிக் கன்பு செய்வாம்

-கந்தபுராணம்

★ வானுலகும் மண்ணுலகும் வாழுமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமதம் ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்

-சேக்கிழார் நாயனார் புராணம்

★ மலரவனுந் திருமாலுங் காணாமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருந்தில்லைக் குடதிசைக்கோ புரவாயில்
நிலவியகற் பகக்கன்றின் நிரைமலர்த்தா ளிணைபோற்றி

-சேக்கிழார் நாயனார் புராணம்

★ தன்னோங்கு மலரடியுந் தளிரோங்கு சாகைகளு
மின்னோங்கு முகக்கொம்பும் விரவியகண் மலர்களுமாய்
மன்னோங்க நடமாடு மன்றோங்கு மதிற்குடபாற்
பொன்னோங்கன் முன்னோங்கும் பொற்பமர்கற் பகம்போற்றி

-கோயிற் புராணம்

★ திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும
பெருகு மாடத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

-விருத்தாசல புராணம்

★ நல்ல சொற்பொரு ளாளு நடாத்தவு
மெல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லு மானை முகத்தினை மேவிவாழ்
வல்ல பைக்குரி யானை வாழ்த்துவாம்

-பிரமோத்தர காண்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ கணேச அச்சகம், திருக்கோணமலை. தொ. பே. 026 - 22617